www.tamilarangam.net

தந்துதவியவர்: தேசம்நெற்

40p

# ஈழபூமி

லண்டனில் இருந்து வெளிவரும் இரு வாரப்பத்திரிகை

ஆண்டு 2 இல 2 09-08-1993 பக்கங்கள் 10

**ரஞ்சிற் அன் கோ**

சொலிசிட்டர்ஸ்

அகதிகள் தொடர்பான விடயங்கள், பொலிஸ் நிலையம் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் சகல விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் தொடர்புகொள்ளுங்கள்:

176 மிச்சம் ரோட், ரூட்டிங்

தொலைபேசி 081 - 767 9717

# வவுனியா வடக்குப் பகுதிநோக்கி இராணுவத் தாக்குதல் — இராணுவ விஸ்தரிப்புக்கு ஏற்பாடு

(வவுனியா)

**வவுனியா தாண்டிக்குளத்தில் இருக்கும் இராணுவ முகாமில் இருந்து இராணுவ விஸ்தரிப்பை மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. வவுனியா வடக்குப் பகுதிகளை நோக்கி இத்தாக்குதல்கள் விஸ்தரிக்கப்படலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.**

பலாலி இராணுவ முகாமிற்கும் காரைநகர்முகாமிற்கும் பிரதமர் விஜயம் செய்ததை அடுத்து இத்தாக்குதல்களுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக நம்பப்படுகிறது. ஆனியப்பிரதேசத்தின் எல்லையில் புலிகள் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளார்கள். அருகாமையில் உள்ள பொதுமக்கள் அச்சத்தின் நிமித்தம் வேறு இடங்களுக்கு இடம்பெயர்வதாக அங்கிருந்து கொழும்புக்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏராளமான இராணுவத் துருப்புகள் குவிக்கப்படுவதாக அறியமுடிகிறது. வவுனியா வந்தடையும் வர்த்தகர்களின் லொறிகள் இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்படுகிறது. இருப்பினும் இராணுவத்தரப்பில் இச்செய்தி பற்றி மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை இராணுவம் தாக்குதல்களை ஆரம்பிக்கவில்லை. நீண்ட நாட்களாக தாண்டிக்குள எல்லையில் இருந்து நகர முடியாது இராணுவம் முகாமுக்குள் முடங்கி இருப்பது தெரிந்ததே.

தாக்குதல் ஆரம்பிக்கப் பட்டால் பாரிய சேதம் ஏற்படலாம் என்று எண்ணப்படுகிறது.



அண்மையில் ரூட்டிங் பிரதான வீதி 133 இல. வீடொன்றில் வைத்து மோசமாகத் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட அலிங்கநாயகத்தின் மரணச் சடங்கில் எடுத்த படம். அவரின் பாரியாரும் உறவினர்களும் கதறி அழுவதைப் படத்தில் காண்க.

படப்பிடிப்பு: சுதன் - ஈழபூமி

**நியூரெக் அச்சகம்**

திருமண அழைப்பிதழ்கள் மற்றும் உங்கள் சகல விதமான பலவர்ண வேலைகளுக்கும் நாடுங்கள்

1083 ஹரட் லேன், ரூட்டிங். தொலைபேசி 081 - 672 7113

அனைத்து செய்திகளையும் தாங்கிவரும் தனித்துவமான பத்திரிகையே ஈழபூமி


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்

## கார்ல் மார்க்ஸ் வாழ்கைச் சுருக்கம்

இன்று உலகில் பல்வேறு நாடுகளிலும் வாழுகின்ற தொழிலாளி வர்க்கம் கடந்த நூற்றாண்டுகளைவிட ஏதோ சில வகைகளில் தமது உன்னதமான உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இன்றைய சமுதாய அமைப்பு முறைகள் மாற்றியமைக்கப்பட்டமைக்கும், மாறிக் கொண்டிருப்பதற்கும் மிகவும் மூலகாரமானவர் பொதுவுடமைத் தத்துவத்தினதும், தொழிலாளி வர்க்கத்தினதும் தந்தை கார்ல் மார்க்ஸ் என்பவரே. இவரை அறியாதார் உலகில் யாரும் இருக்க முடியாது. இருப்பினும் இவரின் வாழ்கை வரலாற்றையும் அவர் தனது வாழ்நாளில் எந்தெந்த இடங்களில் எப்படி எப்படியாக தொழிலாளரின் உரிமைகளுக்காகப் போராடினார் என்பதையும் அறியாதோர் பலர் உள்ளனர்.



இவருடைய பொதுவுடமைத் தததுவததையும,தொழிலாளரின உரிமைகளையும் கடந்த எழுபது ஆண்டுகளாக பல நாடுகள் நல்ல முறையில் செயல் படுத்த முயன்றதன் விளைவே இன்று குறிப்பாக ஐரோப்பிய, அமெரிக்க முதலாழித்துவ, ஜனநாயக நாடுகளில் வாழுகின்ற தொழிலாளர்கள் தமது உரிமைகளை ஓரளவேனும் பெற்றுக் கொண்டுள்ளனர். இதையாரும் மறைக்கமுடியாத மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆனால் இன்று உலகின் சோஷலிச நாடுகள் தமது அரசியல் கொள்கைகளையும், பொருளாதாரக் கொள்கைகளையும் தவிர்க்கமுடியாத காரணங்களினால் மாற்றி அமைத்துக் கொண்டிருந்தாலும் கார்ல் மார்க்ஸினுடைய சோசலிச சமுதாய அமைப்பு முறையும், தொழிலாளரின் உரிமைகளும் தமது வடிவங்களை மாற்றி வளர்ந்து கொண்டே வருகின்றன. இவை நாகரீகமான மனித சமுதாய அமைப்பில் தவிர்க்க முடியாதவையும், அழிக்கமுடியாதவையும். ஆனால் இவை குறுகியகாலப் பயிர்கள் அல்ல. இவற்றை குறுகிய காலப்பயிர்களாக்கி பலனைப்பெற முயன்றதின்விளைவே சோஷலிச நாடுகளான சோவியத்யூனியனிலும், அதன் நேசநாடுகளிலும் இன்று ஏற்பட்டுள்ள தாக்கங்களும், தவிர்க்க முடியாத மாற்றங்களும்.

இந்தத் திடீர் மாறுதல்களினால் உலகின் பல பாகங்களிலும் வாழுகின்ற மக்களின் வாழ்க்கை முறைகளில் பல விதமான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அத்துடன் இன்று உலகையே சுருக்கி அமைத்துக் கொண்டிருக்கும் தொழில் நுட்ப வசதிகளின் உதவிகளைக் கொண்டு நாடுகளின் உயிர் நாடிகளாக செயல்படும் தொலைத் தொடர்பு சாதனங்களின் கொடுரமான பற்களில் இருந்து மக்கள் தப்பி வாழவேண்டுமாயின் பல விதமான செய்திகளையும் மக்கள் வாசித்து அறிந்து கொள்ள வேண்டியது எல்லாவற்றிலும் மிகமிக முக்கியமானதாகவே கருதப்படுகிறது. எனவே தான் கார்ல் மாக்ஸ்சினுடைய வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளியிடுவதன் மூலம் இன்று மக்கள் மத்தியிலே வளர்ந்து வருகின்ற சோஷலிச, கம்யூனிசதத்துவங்களைப் பற்றிய தவறான கருத்துக்களை களைந்தெடுத்து தெளிவான ஒரு சிந்தனையை மக்கள் வளர்த்துக் கொள்ளவும் இது உதவும். இன்று உலகிலே நடந்து கொண்டிருக்கின்ற மாற்றங்களும் உடைவுகளும் மக்களின் வாழ்வை உயர்த்தவா? அன்றி தாழ்த்தவா? என்றும், அழிக்கப்பட்டதும் உடைக்கப்பட்டதும் சோஷசலிசமா. அன்றி சோவியத் யூனியனான என்பதையும் நீங்களே தீர்மானித்துக் கொள்ளக்கூடிய ஓர் வாய்ப்பாகவே இதைக் கருதிக் கொள்ளுங்கள். எல்லாக் காலங்களுக்கும் நிலைத்திருக்கின்ற பெரும் புகழ்மிக்க அருஞ்செயல்கள் புரிந்த மாபெரும் மனிதர்களுக்கு மத்தியில் பாட்டாளி வர்க்கத்தில் மிகச் சிறப்பான தத்துவாசிரியரும் தலைவருமான கார்ல் மார்க்ஸ் தனிச் சிறப்பான இடத்தை வகிக்கிறார்.

இயற்கை, சமூகம் மற்றும் மனித சிந்தனையின் வளர்ச்சியை நிர்ணயிக்கின்ற பொது விதிகளைப்பற்றி இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல் வாதம் என்ற போதனையைப் படைத்து அதன்மூலம் உலகத்தை இன்றும் சிறப்பானமுறையில் அறிந்து கொள்வதுடன் மட்டுமின்றி அதைப்புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்கும் வழி காட்டியதனால் மார்க்ஸ் வரலாற்றுக்கு மிகப் பெரும் சேவை செய்திருக்கிறார்.

முதலாளித்துவத்தின் வீழ்ச்சியும், கம்யூனிஸ்டு சமூகத்தின் வெற்றியும் தவிர்க்க முடியாதவை என்று விஞ்ஞான ரீதியாக நிரூபித்துக்காட்டியதன் மூலம், மனித குலத்துக்கு இன்னும் சிறப்பு மிக்க எதிர்காலத்தைப் பற்றி அதுவரையிலும் தெளிவில்லாத கனவாக மட்டுமே இருந்த சோசலிசத்தை மார்க்ஸ் ஒரு விஞ்ஞானமாக மாற்றியமைத்தார்.

மார்க்ஸ் தன்னுடைய நண்பரான பிரெடெரிக் எங்கெல்சுடன் இணைந்து பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்றுப் பாத்திரத்தை விஞ்ஞான ரீதியாக நிறுவினார். அதுவே மிகவும் வளர்ச்சியடைந்த, முற்றிலும் முரணில்லாத புரட்சிகரமான வர்க்கம். அது தன்னை விடுவித்துக் கொள்வதன்மூலம் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலின் ஒவ்வொரு வடிவத்தில் இருந்தும் மனித குலம் அனைத்தையும் விடுவிக்கும் என்பதை எடுத்துக் காட்டினார்.

பாட்டாளி வர்க்கப் புரட்சி மற்றும் பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தின் மூலமாக சோசலிச சமூகத்துக்கு முன்னேறும் பாதையை மார்க்ஸ் சுட்டிக்காட்டினார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றிய போதனை மார்க்ஸீயத்தின் அடிப்படையான பகுதியாகும்.

**கடவன்**

பாட்டாளி வர்க்கம் தன்னுடைய சொந்தப் பாட்டாளி வர்க்கக் கட்சியை அமைத்துக் கொண்டாலொளிய, வர்க்கக் கட்சியை அமைத்துக் கொண்டால் ஒழிய, முதலாளி வர்க்கத்துக்குச் சவக்குழி தோண்டுபவன் மற்றும் புதிய சமூகத்தை நிர்மாணிப்பவன் என்ற வரலாற்றுக்கடமையை அது நிறைவேற்ற முடியாது என்பதை மார்க்சிய மூலவர்கள் போதித்தார்கள்.

மார்க்சின் போதனையே தொழிலாளி வர்க்கத்தின் சித்தாந்தம், அதன் அடிப்படை நலன்களின் தத்துவரீதியான வெளியீடு அது உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கின்ற விஞ்ஞானம்.

மார்க்ஸ் வாழ்ந்த பாடுபட்டுழைத்த, போராடிய காலத்தையும், நம்மையும் பிரிக்கின்ற வருடங்களைப் பின்னோக்கிப் பார்த்தால், புரட்சிகரமான வர்க்கப் போராட்ட நிகழ்வுப் போக்கில் பெருந்திரளான உழைக்கும் மக்கள் மீது அவருடைய போதனையின் தாக்கம் எப்படி வளர்ச்சியடைந்து வருகிறது என்பதை நாம் தெளிவாகக் காணமுடியும்.

உழைக்கின்ற ஒடுக்கப்பட்டிருக்கின்ற பெருந்திரளான மக்கள் அனைவருக்கும் தலைமை தாங்குகின்ற மிக வளர்ச்சியடைந்த வர்க்கமான தொழிலாளி வர்க்கம் உலக வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் மென்மேலும் அதிகரிக்கின்ற தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது. மார்க்சினால் கண்டுபிடிக்கப்பட்டு லெனினால் விரித்துரைக்கப்பட்ட சமூக வளர்ச்சி பற்றிய புறநிலை விதிகளை வழிகாட்டியாகக் கொண்டு உலகத்தை அதிகத் தீவிரமாக, உணர்வு பூர்வமாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

### மார்க்சின் இளமைப் பருவம்

விஞ்ஞான கம்யூனிசத்தின் மூலவரான கார்ல் மார்க்ஸ் 1818 மே 5ல் பிரஷ்யாவின் ரைன் மாநிலத்தில் திரிர் என்ற நகரத்தில் ஒரு வழக்குரைஞரின் குடும்பத்தில் பிறந்தார். மார்க்ஸ் பிறந்த பூமியான ரைன் மாநிலம் பிரஷ்யாவிலேயே தொழில் துறையில் மிகவும் வளர்சியடைந்த பிரதேசங்களில் ஒன்றாகும். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வெடித்த பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சியின் நேரடியான தாக்கத்தில் இங்கே நிலப்பிரபுத்துவக் கட்டணங்களும் சேவைகளும் ஒழிக்கப்பட்டிருந்தன. அங்கே நிலக்கரி மற்றும் இரும்புத் தாதுகள் ஏராளமாகக் கிடைத்த படியால் தொழில்துறை வளர்சிக்குச் சாதகமான நிலை

தொடர்ச்சி 9ம் பக்கம்



கார்ல் மார்க்ஸ் பிறந்த நகரமான திரிர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஈழபூமி

ஆண்டு 2 இல 2 09-08-1993 பக்கங்கள் 10

# 83 ஜூலை தந்து சென்ற பாடம்

தமிழ் பேசும் மக்களின் போராட்ட வரலாற்றில் கோர நிகழ்வுகளைச் சுமந்து வந்த ஆடி த்திங்கள் 83 முடிவடைந்து 10 வருடங்கள் ஆகிவிட்டன. 1977 ஆண்டுப் பகுதிகளில் கூர்மையடைந்த விடுதலைப் போராட்டம் 93 ஆம் ஆண்டின் நடுப் பகுதியைத் தாண்டும் இந்த வேளையிலும் கூட ஒரு தீர்க்மான பாதையை விட்டு விலகியே நிற்கிறது.

காலத்துக்கு காலம் தமிழ் பேசும் மக்களின் மீது திட்ட மிட்டு வன்செயலை கட்ட விழ்த்து விடும் ஸ்ரீ லங்கா பாசிச அரசின் மற்றொரு நடவடிக்கையே 83 ஜுலை வன்செயலாகும்.

மீண்டும் ஒருமுறை ஈழம் வெந்தது. மக்களின் சொத்துகள் தீயிடப்பட்டன. கூலிப்படைகள் கொழுத்தி கும்மாளமிட்டார்கள். பெண்கள் தெருவோரங்களில் பலாத்காரம் செய்யப்பட்டார்கள். தமிழர்கள் வீதியோரங்களில் சுட்டுபபொசுககபபடடாாகள். இவை அத்தனையையும் மீறி வந்தது வானொலிச் செய்தி ஒன்று. வெலிக்கடையில் தமிழ் இளைஞர்கள் சிங்களக் கைதிகள் வெட்டியும் குத்தியும் அடித்தும் வதைத்தும் கொல்லப்பட்டார்கள் என்பதே அந்தச் செய்தி. ஈழம் மீண்டும் மௌனித்தது. வெலிக்கடைச் சிறையிலே பலிக்கடா ஆனார்கள் எங்கள் இளைஞர்கள்.

மரணதண்டனை நிறைவேற் றப்படும் போது என் இறுதி ஆசையை நிறைவேற்றுவதாக இருந்தால் என் கண்கள் இரண்டையும் பார்வை இழந்த ஒரு தமிழ் மகனுக்கு கொடுங்கள். மலரப் போகும் தமிழ் ஈழத்தை அவன் மூலம் நான் காண்பேன்'' என்று ஜனநாயக சோசலிச சமதர்ம குடியரசின் நீதிமன்றத்தில் கூறியதற்காக குட்டிமணியின் கண்கள் நோண்டி எடுக்கப்பட்டு சப்பாத்துக் கால்களால் சிதைக்கப்பட்ட இந்த நாள் நாம் சோகங்களைத் தாங்கிக் கொண்ட நாள் மட்டுமல்ல, துயரங்களைச் சுமந்த நாள் மட்டுமல்ல தமிழீழத்தைத் தவிர எமது பிரச்சனைக்குத் தீர்வில்லை என்று புரிந்து அறுதியிட்டுக் கொண்ட நாளும் கூட. சிங்கள இனவாத அரசை எதிர்த்து ஜுலை படுகொலையை நினைவு கூர்ந்து போராட வேண்டியது எமது கடமைதான். இந்தக் கோரச் சம்பவம் நடந்து பத்தாவது ஆண்டான இந்த வருடத்தை பாரிய அளவிலே நினைவு கூர்ந்திருக்க வேண்டும். ஈழத்தின் கோர நிகழ்வொன்று ஒரு தனி இயக்கத்தின் சுலோகங்கள் தூக்கப் படுவதற்காக பயன்படுத்தப்பட்டமை வேதனை தரும் நிகழ்வே. கிட்டு கொல்லப்பட்ட போது சுவரொட்டி அனைத்திலும் தளபதி, கேணல் என்று நாமம் தாங்கிக் கொண்ட சுலோகங்கள் குட்டிமணி கொல்லப்பட்ட நிகழ்வை நினைவு கூரும் போது மாயமாய் மறைந்ததன் நோக்கம் புரியவில்லை.

இது தமிழ் பேசும் மக்களின் பிரச்சனை. இங்கே தமிழ் பேசும் மக்களின் பங்களிப்பு அவசியம். ஒரு பொதுமைப் படுத்தப்பட்ட சுலோகம் தரிக்காத ஊர்வலம் ஒன்று ஒழுங்கு செய்யப் பட்டிருந்தால் ஐரோப்பா முழுவதும் பாரிய எதிர்ப்பணி ஊர்வலம் ஒன்றை ஒழுங்கு செய்திருக்கலாம்.

வேறு இயக்க நலன்களுக் காக பொதுப்பிரச்சனையை பாவித்துக் கொண்ட இயக்கம் இந்த ஊர்வலத்திலும் கணிசமான தொகையை அணி திரட்டத் தவறியதை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

குட்டிமணி தங்கத்துரை உள்பட 53 பேர் கொல்லப்பட்ட நினைவாக ஊர்வலம் நடத்துகிறோம் என்று முன்வரத் தயங்கிய இவர்களின் விடுதலைப் போக்கின் பின்னால் மக்கள் அணி திரள்வது என்றும் சாத்தியமாகாது.

# 6ம் மாடி தடுப்பு முகாமிலிருந்து ஒரு கடிதம்!

பி.ஏ.காதர் 6ம் மாடி தடுப்பு முகாம்

கொழும்பு 01 15-04-1993

நண்பர் ஈசன் ஊடாக,

அன்புடையீர், புத்தாண்டு வாழ்த்துக்கள். நேரடி தொடர்புகளால் நெருங்கிய உறவைக் கொண்டிராத போதும் ஒரு குறிப்பிட்ட நற்பணிக்கு உதவும் உயர்ந்த மனம் படைத்த அன்புள்ளம் கொண்ட நண்பர்களோ, வணக்கம்.

வரலாற்றுக் காரணங்களால் பின்தங்கி விட்ட மலையகத்தில் விழிப்புணர்வு பிறக்க வேண்டுமானால் மலையக மக்கள் தமது கடந்த கால அனுபவங்களையும் நிகழ்கால நடப்புக்களையும் அறிவுபூர்வமாக விளங்கிக் கொள்ள வேண்டும். இதற்கு மலையக மக்களைப் பற்றிய வரலாற்று நூல்கள் நிச்சயம் உதவும்.

ஆனால் அத்தகைய நூல்கள் இல்லாமை ஒரு பெரும் குறை. நான் முன்னர் மோகன்ராஜ் என்ற புனைபெயரில் எழுதி ஈரோஸ்'' வெளியிட இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்'' என்ற என்ற சுருக்கமான வரலாறு இவ்வகையில் வெளியான முதலாவது நூலாக இருந்தாலும் அது முழுமையான ஒரு பணி அல்ல. அதைவிட அப்போது "ஈரோஸ்'' தடைசெய்யப்பட்டிருந்த ஒரு இயக்கம். எனவே அதனால் பிரசுரிக்கப்பட்டதால் பகிரங்கமாக அதனை வைத்திருக்கவோ பரவலாக கருத்தரங்குகள் நடத்தவோ முடியாமற் போனது - வெகுஜனங்களை அது சென்றடையவில்லை.

எனினும் இன்னும் அது தேடி வாசிக்கப்படும் நூலாக உள்ளது. தன்னிடம் உள்ள ஒரே பிரதி வாசிக்கக் கொடுத்தால் களவாடப்பட்டுவிடுமோ என்ற பயத்தில் வைத்துக் கொண்டே இல்லை என்போரும், விடாமல் தேடி இருப்பவரிடம் இருந்து படப்பிரதி செய்து கொள்வோரும் என்னிடம் ஏன் மறுபதிப்பு செய்யக்கூடாது'' என வற்புறுத்தும் போது எனக்கு ஒரு வித நிறைவு ஏற்படுகிறது. மறுபுறம் ஏக்கம் பிறக்கிறது.

மலையக வரலாற்றை முறைப்படி தொகுக்க வேண்டும் என்ற ஆர்வமும் முயற்சியும் என்னைப் பொறுத்தவரையில் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. நீண்டகாலமாக அதற்கான ஆதாரங்களைத் திரட்டி வருகிறேன். அவற்றில் ஒரு பகுதியைத் தான் "இருபதாம் நூற்றாண்டின்...'' நூலில் நான் பதிவு செய்தேன். அதன் பின்னர் பல நூற்றுக்கணக்கான உசாத்துணை நூல்களும், தரவுகளும் கிடைக்கப் பெற்றாலும் அவற்றை வாசித்து ஆராய்வதற்கான அவகாசம் கிடைக்கவில்லை.

இந்த இரண்டு வருட சிறைவாசம் அந்த விலைமதிப்பற்ற நேரத்தை எனக்குத் தந்துள்ளது. தினசரி 10 மணித்தியாலங்களுக்குக் குறையாமல் பல மாதங்களாக இதற்காக ஒதுக்கி வருகிறேன். பெரும்பகுதி வேலை முடிந்துவிட்டது. இறுதி நேரத்தில் தான் பிரசுரிப்பதில் உள்ள சிக்கல்கள் பற்றி சிந்தித்தேன். எழுதுவதையே நிறுத்திவிடலாம் போலிருந்தது. ஒருபுறத்தில் அதிகரித்துச் செல்லும் பக்கங்கள் (நூலின்) மறுபுறத்தில் உயர்ந்து செல்லும் பிரசுரத்திற்கான செலவு...

இச்சமயத்தில்தான் உங்களிடம் இருந்து பச்சை விளக்குக் காட்டப்பட்டது. உற்சாகமும் நம்பிக்கையும் பிறந்தது.

கடல் கடந்து சென்று ஊர் உறவைப் பிரிந்து வழும் உங்கள் பணத்தின் அருமை - உழைப்பின் மதிப்பு எனக்குத் தெரியும். அவை தொடர்ச்சியாக மலையக பிரசுரங்களை வெளிக்கொணர்வதற்கான மூலதனமாக செயற்படும் என்ற உறுதியை உங்களுக்களிக்கிறேன். வெளியாகும் நூலகளின் ஒவ்வொரு பிரதி தொடர்ச்சியாக கிடைக்க ஏற்பாடு செயவேன். ஒரு நிரந்தரப் பயன் உள்ள இப் பணியில் எமது கூட்டு முயற்சி வெற்றி பெறட்டும்.

நன்றி.

இப்படிக்கு அன்புள்ள

பி.ஏ.காதர்

ஈழபூமிக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

தரமானவை பிரசுரிக்கப்படும்

The Eelabhoomi
P.O.Box: 214
Longmead Road
Tooting
London SW17

www.tamilarangam.net


யமுனா ராஜேந்திரன்

# மணிரத்னமும் தமிழில் நல்ல சினிமாவும்

“நல்ல சினிமா என்பது மனிதனின் அவலத்தையும், கட்டுத்தறிகளில் இருந்து விடுவித்துக்கொள்ள அவன் நடத்தும் போராட்டத்தையும், வரலாற்றுக்கு எதிர்த்திசையில் புதிய வரலாற்றைப் படைக்கும் அவன் தேடுதலையும் வெளியிடும் சினிமா.”

தமிழ் சினிமாவில் நிறைய தனித் போக்குகளை கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் நம்மால் இனம் காணமுடியும்.

1. சுதந்திரப் போராட்ட மதிப்பீடுகளால் உந்துதல் பெற்ற ஒரு தலைமுறை: பீம்சிங்

2. சமூக சீர்திருத்தவாதத்தினால் ஆகர்சிக்கப்பட்ட ஒரு தலைமுறை: மு.கருணாநிதி

3. மாறிவரும் சமூகச் சூழலுக்கேற்றவாறு பிரச்சனைகளை சித்தரித்த ஒரு காலம்: பாலச்சந்தர்

4. கிராமச் சூழலை நகரமாந்தரின் பார்வையில் வெளியிட்ட ஒருபோக்கு: பாரதிராஜா

5. சினிமாவை காட்சிரூபமான (visual) சாதனமாகப் பார்க்கிற நவீன தலைமுறை: மணிரத்னம், பாலு மகேந்திரா

6. சினிமாவை சமூக மாற்றத்தின் விஞ்ஞான வடிவமாகக் கையாள முயன்ற, நிலைநாட்ட முடியாது இன்றளவும் தனி மனிதர்களாகவே நின்றுவிட்ட சில ஆளுமைகள்: எம்.பி.சீனிவாசன், கோமல் சாமிநாதன், ருத்ரய்யா, ஹரிகரன், ஜெயகாந்தன்.

எம்.ஜி.ஆர், சிவாஜி, ரஜனிகாந், கமல்ஹாசன், விஜயகாந்த், சரத்குமார் என்று இந்த நடிகர்களுக்கு அப்பால், சினிமாவைக் கருத்தளவில் நினைத்துப் பார்க்கும் ஒரு முயற்சியாக நான் பின்நோக்கிப் போகிறேன்.

சமூக வளர்ச்சியினூடே சினிமா எனும் சாதனம் தமிழ்ச் சூழலில் மாறி வந்திருக்கும் கப்பல்களை சுட்டிக் காட்டுவதே என் நோக்கம்.

இந்த நோக்கம் உலக சினிமாவை இந்திய வாழ்க்கைச் சூழலில் உள்வாங்கிய, உலக சினிமாவின் விளைவுகளை தமிழ் சினிமா பார்வையாளனின் மனத்துள் எழுப்ப விரும்பும் மன உந்துதலில் எழுந்தது.

தமிழில் நல்ல சினிமா எனும் போது அனுபவம் சார்ந்து எம்மை பாதித்த சில நல்ல சினிமாக்களின் அடிப்படையில் அக்கருத்து எழுவது இயல்பு.

நல்ல சினிமா என்பது மனிதனின் அவலத்தையும், கட்டுத்தறிகளில் இருந்து விடுவித்துக்கொள்ள அவன் நடத்தும் போராட்டத்தையும், வரலாற்றுக்கு எதிர் திசையில் புதிய வரலாற்றைப் படைக்கும் அவன் தேடுதலையும் வெளியிடும் சினிமா.

இந்த நிமிஷத்தில் இந்த சினிமாவுக்கு ஆன ஆதாரங்களை சில்வஸ்டர் ஸ்டலோன், சுவாஸ்நேக்கர், பெர்ட் ரனால்ட், ரோஜர் மூர், அமிதாப் பச்சன், வினோத் கன்னா, எம்ஜி.ஆர், ரஜனிகாந்த், சரத்குமார், பிரதிநிதிப்படுத்தும் சினிமாக்களில் இருந்து நிச்சயமாக உருவாக்கிக் கொள்ள முடியாது.

இந்த விமர்சனப் பார்வையை உருவாக்கிக் கொள்ள தற்காலிக அரசியல் கட்சி மதிப்பீடுகள், தனிநபர் ஆசைகள் பலவீனங்கள் ஆகியவற்றில் இருந்து நாம் (நான்) விடுபடவேண்டும்.

உலக வரலாற்றில் அலைவீசி எழுந்த அரசியல் சமூக மாற்ற எழுச்சிகளினூடே மனித அனுபவங்களை முன்வைத்த சினிமாவின் அடிப்படைகளை நாம் தேடவேண்டும்.

அக்டோபரில் நிகழ்ந்த ரஷ்யப் புரட்சி, ஐரோப்பிய நாடுகளில் அலையடித்த மாணவர் எழுச்சி, அல்ஜீரியா, கியூபா என்று உலகெங்கும் எழுப்பிய தேசவிடுதலைப் போராட்டம், குடும்ப அமைப்புகள் நொறுங்கி விழும் அவலம், விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி விளைவித்த சூழலியல் பிரச்சனைகளில் புழுவாய்த் தூக்கியெறியப்பட்ட மனித சோகம், நிறவெறிக்கும் பாசிசத்துக்கும் எதிரான போரில் வெளிப்பட்ட மனித உன்னதம்.

இந்த வரலாற்று நிகழ்வுகளுக்கிடையில் சினிமா எனும் சாதனம் நிகழ்த்திய மனிதப் புரிதல்தான் நல்ல சினிமாவின் அடிப்படை.

இந்த அடிப்படைகள் நம்மை இரண்டு திசைகளில் இருந்து பாதிக்கிறது.

1. ஐரோப்பிய மதிப்பீடுகளுக்குள் உலக மனித மதிப்பீடுகளை தேடிய இயக்குனர்களின் பாதிப்பு.

பிரான்ஸின் கோடார்ட், இத்தாலியின் பெலின்னி, ரஷ்யாவின் ஐஸன்ஸ்டீன், ஸ்பானிஸ் பாசிச எதிர்ப்பாளர்கள், அமெரிக்காவின் ஆலி வர் ஸ்டோர்ன், பிரான்ஸிஸ் போர்டு கொப்பாலோ, பிரிட்டனின் ரிச் சார்ட் அட்டன்பரோ போன்றவர்கள் ஏற்படுத்தும் பாதிப்பு.

2. மூன்றாம் உலக நாடுகளின் இயக்குனர்கள் செனகலின் உஸ்மான் செம்பேன், இலத்தீன் அமெரிக்காவின் கிளாபர் ரோச்சா, துருக்கியின் யில்மஸ் குணே, இந்தியாவின் ஸத்யஜித்ரே, மிருனாள்சென் போன்றவர்கள் தரும் பாதிப்பு.

இந்த இரண்டாவது பாதிப்புதான் நம் மனதுக்கு, வாழ்வுக்கு மிகமிக நெருக்கமானது.

மூன்றாம் உலக சினிமாவின் பாதிப்பை விட (இதை வேறு மொழியில் சொல்வதனால், நம் சொந்த வாழ்க்கை தந்த பாதிப்பைவிட) ஐரோப்பிய சினிமாவின் பாதிப்புதான் தமிழ் சினிமாவில் அதிகம்.

பைபிளோடு காலனிய ஆக்கிரமிப்பும் நுழைந்தது போலவே, சினிமா எனும் சாதனத்தோடு அதன் ஆதிக்கக் கருத்தமைவுகளோடும், கனவுலகமும் நம் நாடுகளில் நுழைந்தது.

ஐரோப்பியப் படங்களைப் போலவே அரண்மனைகளைத் தாண்டிய நமது காடுகளுக்குள்ளும் காட்டு வாசிகள் மிருகத்தனமாக கறுப்பு நிறம் பூசிக் கொண்டு அடையாளமற்ற சத்தத்தில் கதறிக் கொண்டு கால்கை அசைத்துக் குதித்தார்கள். இது நீக்ரோ மக்களைக் கொச்சைப்படுத்தும் ஒரு ஐரோப்பிய மனோவயக் கருத்து வெளிப்பாடு.

பாரசீகத்துப் பெண்கள் மார்புகளை அசைத்து வெள்ளையர்களுக்குப் பரவசமூட்டியதைப் போலவே நமது அடிமைப் பெண்களும் பாரசீகத்து உடைகளில் பாலை வனங்களில் நடமாடினார்கள்.

கனவு. இது கனவுலகம். இந்தக் கனவுகளை இன்றளவும் நாம் தமிழ் சினிமாவில் காணலாம்.

தனிநபர் அகந்தையை நிலைநாட்டும் நாயக மோக திரைப்படங்கள்.

கிர்க் டக்ளஸ் நடித்த் ஸ்பார்டகஸ் படத்தைப் பாருங்கள். ஸ்பார்டகஸ் இறுதியில் கழுவிலேற்றப்படுகிறான். அவன் மனிதன். மார்க்சுக்கு பிடித்த மனிதன்.

தமிழ் சினிமாவில் ஸ்பார்

தொடர்ச்சி 6ம் பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காத்திருந்த கணங்களே

ஈழபூமி சிறுகதை


லண்டன் மாநகரின் இலையுதிர்காலத்து விடிகாலைப் பொழுது. போர்வையைத் தாண்டி உள்ளே வர எத்தனித்துக் கொண்டிருந்த மெல்லிய குளிர். அவனுக்கு ஏனோ மார்கழி மாதத்து பனிக்குளிரையும் ஊரையும் இன்றும் எண்ணி ஏங்க வைத்தது. ஊ... என்ற இரைச்சலுடன் வெளியே காற்று வீசிக் கொண்டிருந்தது. இன்னும் இருள் விலகாமல் அடம் பிடித்துக் கொண்டிருந்தது. குளிரும் விடிகாலைச் சோம்பலும் அவனை இன்னும் ஒரு நிமிடம் கூடுதலாக நித்திரை கொள்ள வேண்டும் போல அயர்ச்சியைத் தந்தது. எட்டுமணிக்கு வேலை தொடங்கியே ஆக வேண்டும் என்ற உண்மை அவனை போர்வையை விலத்தி எழுப்பிவிட்டது. சசி எழும்பி துவாயை எடுத்துத் தோழில் போட்டபடி சப்தப்படாமல் குளியலறைக்குள் போகிறான். வீட்டில் உள்ள மற்றவர்களுக்கு விடியப்போகும் இந்தப் பகல் பொழுதுதான் இரவாக இருக்கும். அவர்கள் எல்லோரும் விடியற்காலை நான்கு ஐந்து மணிக்குத்தான் வேலையால் வீடு வந்தவர்கள். ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு பொறுப்பு, ஒரு கவலை நாயாக உழைக்க வைத்துக்கொண்டிருந்தது. ஒருவரோடு ஒருவர் நின்று கதைக்க நேரம் இல்லாமல், சிரித்து மகிழ முடியாமல் இயந்திரமயமாகி விட்ட வாழ்க்கை. வேலையும், அயர்ச்சியும் நித்திரையும, விட்டுப் பிரிந்து வந்தவர்களையும், மண்ணையும் நினைத்து பெருமூச்சு மட்டுமே விட முடிந்த வாழ்க்கை. சசி பெருமூச்சு விட்டபடி பல் துலக்கியபடி சுவரில் தொங்கிய கண்ணாடியில் முகம் பார்க்கிறான். ஆழுது வீங்கிய கண்கள் சடாரென மீண்டும் அவனை கலங்க வைத்தது. இன்றுதான் திங்கட்கிழமை வசந்தாவின் திருமணம் நடக்கவிருக்கும் நல்ல நாள். அவனைப் பொறுத்தரையில் அவன் மனம் சூனியமாகிப் போய்விட்டிருந்தது. வசந்தா சசியின் காதலி. மூன்று வருடங்களுக்கும் மேலாக அவன் மனத்தோட்டத்தில் தேவதையாக வலம் வந்தவள். காய்ந்து வரண்டு போயிருந்த சசியின் மனதில் மென்மையான நீரூற்றாக உருவானவள். இன்று இன்னொருவனின் மனைவியாகப் போகிறாள். கடந்த ஒரு மாத்திற்கும் மேலாக திரும்பத் திரும்ப யோசித்து இதயம் கனத்துப் போயிருந்தது. மேலும் யோசிக்க முடியாமல் மனம் வெறிச்சோடிப் போக குளியலறையை விட்டு வெளியே வந்து அவசரமாக தயாராகி ஒரு தேனீர் தயாரித்து கடமைக்குத் தொண்டையை நனைத்து, கோட்டைப் போட்டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறுகிறான்.

> "அவசரப்பட்டு ஐ லவ் யூ'' என்று சொல்லிவிட முடியாதபடி சசிக்குள் ஏதோ போராட்டம். நாணத்தை மறந்து கேட்டுவிட முடியாதபடி அவளின் பெண்மனம்.''

என்னதான் இன்பமோ, துன்பமோ தாக்கினாலும் எதையும் உள்ளே வைத்துப் பூட்டிவிட்டு அன்றாடக் கடமையைச் செய்தே ஆகவேண்டிய நிலை. நேரம் இப்போது ஏழு மணி. இன்னும் இரண்டு பஸ்களைப் பிடித்து வேலைக்குப் போக சரியாக இருக்கும் என யோசித்தபடி நடையை எட்டிப் போட்டு பஸ் நிலையத்தை அடையவும் அவன் உயிர் நண்பன் பிரபா வந்துநின்ற பஸ்ஸிலிருந்து இறங்கவும் சரியாக இருக்கிறது. என்ன மச்சான் வேலைக்குப் போறியோ? என்ன ஒரு மாதிரி இருக்கிறாய்?'' வழமையான விசாரிப்புக்கு மேல் ஒருபடி கூடுதலான அனுதாபம் கேள்வியில் தொங்கி நிற்க சசி மௌனமாக சிரிக்கிறான். என்னை ஆழம் பார்க்க நினைக்கிறாயா நண்பனே? என்பது போல சிரிப்பு. நண்புனே ஆனாலும் எந்தச் சலனத்தையும் காட்டி, அந்தச் சலனம் அவன் மனம் கவர்ந்தவளின் எதிர்கால வாழ்க்கையில் கீறலை விழுத்தாமல் இருக்க வேண்டும் என்ற துடிப்பு. அதிகம் கதைக்க முடியாமல் தொண்டைவரை வந்து நின்ற அழுகுரல் சசியைப் பயமுறுத்தியது. இந்த நிமிடம் மட்டும் ஆண்டவனிற்கு சசியின் மேல் இரக்கம் வந்திருக்க வேண்டும். ஏனெனில் அவன் ஏற வேண்டிய பஸ் இன்றுமட்டும் பத்து நிமிடங்கள் முன்பாக வந்து கொண்டிருந்தது. சரிமச்சான். சந்திப்பம்'' வார்த்தைகளை எண்ணி, மிகவும் கவனமாக குரலை வழமை போல பிரயத்தனப்பட்டு தோற்றுப்போய் அவசரமாக பஸ்ஸில் ஏறிய சசிக்கு இந்தக் குளிருக்குள்ளும வியர்ப்பது போன்ற ஓர் பிரமை. மனத்தில் ஏதோ ஒரு குற்ற உணர்வு முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. நான் இரக்கமில்லாத இரும்புமனம் படைத்தவனா? அவன் தன்னைத்தானே கேள்விகேட்டுக் கொண்டான். அப்படியானால் ஏன் இந்த சோகமும் கண்ணீரும்? முப்பது வயதிற்கு மேல் காதல் வயப்பட்டுவிட்டதால் ஏற்பட்ட இழப்போ இது? இதுவே இருபதுகளில் இருக்கும் இளைஞனாக இருந்தால் எடுத்த முடிவு எதிர்விளைவாக இருந்திருக்குமோ? பலதையும் யோசித்துப் புண்ணாகிய நெஞ்சத்துக்கு ஆறுதல் தேடி எங்கே கிடைக்கப் போகிறது. பஸ்ஸில் இருந்து இறங்கி மாறி தொழிற்சாலைக்குள் காலடி வைத்தபோது வேலை தொடங்க இன்னும் பத்தே நிமிடங்கள் தான் இருந்தன.

> "மரணத்தின் பிடியில் எந்நேரமும் சிக்கலாம் என்ற ஆத்மா தன் உடலோடு இருக்கும் நேரத்தில் பந்தபாசங்களுக்கு ஈடுகொடுத்தாட, தாயின் வழிந்தோடும் கண்ணீரும் நோயும் வசந்தாவின் சகோதரர்களை மிரட்டியது''

வேலைக்கு வந்தால் தன்னை மறந்து இருக்கலாம் என நினைத்தவனுக்கு வேலைக்கு வந்தபின்தான் நெஞ்சம் கூடுதலாகக் கனக்க ஆரம்பிக்கிறது. ஆம் வசந்தகால மேகமாக வசந்தா உலாவந்த இடம் இதுதான். ஆயிரம்தான் வேலை சுமையாக மண்டிக்கிடந்தாலும், அவள் வேலை செய்யும் இடத்தில் தானும் வேலை செய்வதில் சசிக்கு அலாதியான ஆனந்தம். இத்தனைக்கும் இருவரும் ஒருவரோடு ஒருவர் அதிகம் கதைத்தது கூட இல்லை. அசட்டுத்தனமான பேச்சுக்கள், அனாவசியமான சிரிப்புக்கள் எதுவுமே இல்லாமல் இயல்பாய் இதமாய் நிறைவாய் ஆரம்பித்த அவர்கள் காதல் ஒரு வருடத்துக்குமேலாய் இருவரின் மனத்துக்குள் மட்டுமே பூத்துநின்றது. அவசரப்பட்டு ஐ லவ் யூ'' என்று சொல்லிவிட முடியாதபடி சசிக்குள் ஏதோ போராட்டம். நாணத்தை மறந்து கேட்டுவிட முடியாதபடி அவளின் பெண்மனம். ஆனால் அவன் தன்னை விரும்புகிறான் என்பதையும், அவள் தன்னை மனத்திற்குள் விரும்புகிறாள் என்பதையும் ஒருவருக்கு ஒருவர் நடத்தையால் புரிந்து கொண்டார்கள். தமது காதல் பூந்தோட்டமாக மாறி பூத்துக் குலுங்கி நிற்க வேண்டும் என இருவருமே ஏக்கம் கொண்ட போதிலும் சசிக்கு மாத்திரம் அவன் குடும்பச் சூழல் இடையிடையே வந்து கற்பனை வெள்ளத்தை அணை போட்டு நிறுத்திக் கொண்டிருந்தது. குடும்பத் தலைவனை இழந்த அவனது ஏழ்மையான குடும்பம் கண்டபடி கனாக்களைக் காணும் சில்லறைத்தனமான மனதை அவனுக்குத் தர மறுத்திருந்தது. வயோதிபத்தாயும் கால் ஊனமுற்ற அவனது மூத்த சகோதரியும் ஏழாயிரம் மைல்களுக்கப்பால் வாழ்ந்த போதிலும் அவன் மனதைப் பொறுத்தவரையில் மிக அருகிலேயே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலையும், குடும்பத்தை எப்படியாவது காப்பாற்றியே ஆக வேண்டிய கடமையும் கடன்பட்டுத்தான் இங்கு வரவழைத்திருந்தது. பட்ட கடனைத் தீர்த்து, இரண்டு சகோதரிகளைக் கரைசேர்த்து முதுகெலும்பைக் கொஞ்சம் சிரமப்பட்டு நிமிர்த்திய போது மூன்று வருடங்கள் ஓடிவிட்டிருந்தன. அந்தக்காலப் பகுதியில்தான் வசந்தா வேலைக்கு வந்து சேர்ந்திருந்தாள். அவளின் அடக்கமும், பண்பான நடத்தையும், இவற்றுக்கும் மேலாக ஏதோ ஒன்றும் எந்தப் பெண்ணாலும் திறந்து விட முடியாதிருந்த சசியின் மனம் எனும் கோட்டை வாசலை காலப் போக்கில் மிக இலகுவாக திறந்துவிட்டிருந்தது. கடமையை ஓரளவு செய்து முடித்துவிட்டேன் என்ற மனத்திருப்தியை அடையமுடியாதபடி கால் ஊனமுற்ற சகோதரியின் எண்ணங்களும், சகோதரியையும், சசியையும் நினைத்து வேதனைப்பட்டு கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்த அம்மாவின் நினைவும் அவனை அலைக்கழித்தன. மூத்த சகோதரியே ஆனாலும் அவள் ஊனம் காரணமாக திருமணம் அவளுக்குத் தள்ளிப்போக, இளையவர்கள் இருவரும் திருமணபந்தத்துக்குள் இலகுவாக புகுந்துகொண்டார்கள். மூத்தவளுக்குத் தான் சசியின் மேல் எத்தனை பாசம்? அவன் சிறியவனாக இருந்த போதிலிருந்தே தாயைப் போல



கலா ரஞ்சன்

தொடர்ச்சி 7ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மணிரத்னமும் தமிழில்.....

4ம் பக்கத் தொடர்ச்சி

ட்டகஸ்கள் இல்லை. ஜேம்ஸ் பாண்டுகள், ரேம்போக்கள் கேப்டன் பிரபாகரன்கள் உண்டு.

இந்தக் கொச்சையான ஹொலிவுட் பாதிப்புக்கு உட்பட்ட படங்கள்தான் இதுவரையிலான எம்.ஜி.ஆர் – சரத்குமார் படங்கள்.

ஐரோப்பிய சினிமாவின் நல்ல போக்கு நம்மைப் பாதிக்கவில்லை.

மிகமிகக் கெட்ட போக்கான ஹொலிவுட் மோகம் தான் நம்மைபாதித்தது. இது பரவலாகத் தெரியவரபபட்ட வெகுஜன தமிழ் சினிமா.

இந்தக் கனவுலகப் போக்கு, இந்த நாயகப் போக்கு இன்றளவும் தொடர்ந்து வரும் போக்கு.

இந்தப் பாதிப்புகளில் இருந்து விடுதலை பெற்ற சினிமாதான் நல்ல சினிமாவாக இருக்க முடியும். இந் தப் பாதிப்புகளில் இருந்து விடுத லை பெற்ற சினிமாக்களும் சினிமா இயக்குனர்களும் இன்றளவும் தமி ழ் சினிமாவில் இருக்கிறார்கள்.

சில சினிமாக்கள்: கப்பலோட்டிய தமிழன், வீரபாண்டிய கட்டபொம்மன், பாதை தெரியுது பார், நூறுவேலி நிலம், காவல் தெய்வம், உன்னைப் போல் ஒருவன், சில நேரங்களில் சில மனிதர்கள், அவன் அப்படித்தான், ஏழாவது மனிதன், அனல் காற்று, ஒரு இந்தியக் கனவு, தண்ணீர் தண்ணீர்..

இந்த அடுத்த சினிமாவோடு சம்பந்தப்பட்டவர்கள் சமூக மாற்றம் பற்றிய திட்டவட்டமான கருத்துக்கள் கொண்ட இயக்கங்களோடு ஏதேனும் ஒருவகையில் சம்பந்தப்பட்டவர்கள்.

இவை அசலான தமிழின் நல்ல படங்கள் – கனவுகளை மறுத்த, நாயகப் போக்கைத் தவிர்த்த நல்ல படங்கள்.



இவை ஏன் தமிழின் வெகுஜன சினிமாவில் ஒரு போக்காக வளரவில்லை?

இதற்கான பதில் அரசியல் சார்ந்தது, நிறுவனம் சார்ந்தது, அமைப்பு சார்ந்தது, சமூகக் கட்டமைப்பு சார்ந்தது, சிந்தனை சார்ந்தது.

படங்களை வெளிக் கொணர்வதற்கான மாற்றுப் பொருளாதார ஏற்பாடு.

வெகுஜனங்களை அழைத்து வருவதற்கான சிந்தனா ரீதியான முன்னேற்பாடு போன்றவைகள் எல்லாம் இதில் அடங்கும்.

தமிழகத்தில் வளர்ந்து வரும் திரைப்படச் சங்கங்கள் இயக்கமும், சலனம் போன்ற பத்திரிகைகளின் தோற்றமும், சினிமா பற்றி வெளியான புத்தகங்களின் எண்ணிக்கையும் இந்த நாள் தொலைவில் இல்லை எனும் நமபிகையைத தருகிறது.

வரலாறறுககு எதிரான இந்த எதிர் நீச்சல் தொடர்நது கொள்ளும் இதே வேளையில், தங்கு தடையற்று சிலர் படங்கள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது.

மிக அதிகம் பேசபபடுகிறது. இதற்கான காரணங்கள் நிறைய.

கனவைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என நினைக்கும் நிறுவன அமைப்பு. அரசியல் தொண்டர் பலம். நாயகனாக விரும்பும் அரசியல் தலைவர்கள். அதற்காக சினிமா வெளியீடுகள்.

ஒவ்வொரு இயக்குனருடையதும் சிற்சில படங்களைத் தவிர்த்து விட்டால், இந்தப் பொதுவான வெகுஜன சினிமாப் போக்கை நீங்கள் எல்லா இயக்குனர்களிடமும் காணமுடியும்.

நான் பாலச்சந்தர், பாரதிராஜா, பாக்கியராஜ், மணிரத்னம், பாலு மகேந்திரா போன்றவர்களையும் உள்ளிட்டுத்தான் குறிப்பிடுகிறேன்.

இவர்களுக்கிடையில் சிற்சில வித்யாசங்களையும் நாம் காண முடிகிறது.

பாலச்சந்தர் இயக்குநரின் செய் தி சொல்லும் சாதனமாக சினி மாவைக் கையாளுகிறவர், ஒரே செய்தியை வேறு வேறு விதமாகச் சொல்லிச் செல்பவர். பாரதிராஜா சகல கலா வல்லவராக பல்வேறு போகமுடைய (கிறைம், கிராமம், பிறிட்டிஷ் காலம், கட்சித் தொண்டன்) படங்களை முயல்பவராகத் தன்னைக் காண்பவர். ஆனால் எந்தக் கருவிலும் அதன் ஆழத்தைக் கொணர இயலாதவர்.

பாலுமகேந்திராவும், மணிரத்னமும் குறிப்பிட்டுச் சொல்லும் வித்தியாசமானவர்கள்.

சினிமா எனும் சாதனத்தை அதன் காட்சி ரூபத்தன்மையை மிகத் தெளிவாக விளங்கிக் கொண்டவர்கள். இதனாலேயே இவர்களிடமிருந்து தமிழ் சினிமாவின் குறிப்பிடத்தக்க படங்களை வெகுஜனக் கலாச்சார தளத்திலேயே தரமுடிகிறது.

நிச்சயமாக மணிரத்னத்தின் மௌனராகமும், ரோஜாவும், பாலு மகேந்திராவின் வீடும், மறுபடியும் குறிப்பிடத்தக்க படங்கள்.

இந்தப் படங்களில் பாசாங்கு தவிர்க்கப்பட்டிருக்கிறது, வலிந்து வரும் கனவு நிலை தவிர்க்கப் பட்டிருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட படங்களில் இருக்கும் தீவிரத் தன்மையும் அக்கறையும் நிச்சயமாக இவர்களின் பிறபடங்களில் இல்லை என்பதை நாம் சொல்ல முடியும்.

இந்தப் படங்களில் வெளிப்படும் இன்னொரு அம்சம். அவர்கள் எடுத்துக்கொண்ட பிரச்சனைகளின் பாலான அக்கறை சமூகம் சார்ந்த அக்கறை. இந்தக் குறிப்பிட்ட படங்களின் முன்னோடியாக, இவர்களால் நல்ல படங்களைத் தரமுடியும்.

பீம்சிங் ஜெயகாந்தன் கோமல் சுவாமிநாதன் ஹரிகரன் மரபைத் தொடரமுடியும். அதற்கான நிபந்தனை சினிமா சாதனம் பற்றிய கலைப்பிரக்ஞை மட்டுமல்ல, மூன்றாம் உலக அரசியல், கலாச்சாரப் பிரச்சனை தொடர்பான, இந்திய தமிழ் சமூகம் தொடர்பான சமூக அக்கறை.

சினிமா பற்றிய கலைப் பிரக்ஞையும், சமூக அக்கறையும் கொண்ட இயக்குனர்கள் இந்தியாவின் வெகுஜன சினிமாவில் தோன்றியிருக்கிறார்கள்.

ஸியாம் பெனிகல் நிஹ்லானி பரதன் பத்மராஜன் கௌதம் கோஷ் போன்றவர்களை நம்மால் குறிப்பிட இயலும்.

இவைகளை பாலுமகேந்திராவிடமும் மணிரத்னத்திடமும் எதிர்பார்க்க முடியும் என்று தோன்றுகிறது.

'என்னால் இதுவும் முடியும்' என்கிற அடிப்படையில் இருந்தல்ல, 'எனது வாழ்க்கைப் பார்வை இது, இந்த சினிமா சாதனம் என் சமூக அக்கறையின் வெளிப்பாட்டுச் சாதனம்' எனும் நிலைப்பாட்டிலிருந்துதான் தமிழில் நல்ல சினிமா தொடர்ந்து வளரமுடியும்.

தமிழில் நல்ல சினிமா மரபு உண்டு. அதன் தொடர்ச்சி ஒரு சில சினிமா இயக்குனர்களை நம்பி அல்ல, சமூக அக்கறையுள்ள கலஞர்களின் மூலம் தொடரும். தொடரவேண்டும்.

அது செயலுக்கு முன்னால் சிந்தனை சார்ந்தது.

விடுதலைச் சினிமாவுக்கான கட்டமைப்பை (Alternative Structure) உருவாக்குங்கள் என்கிறார் அமெரிக்க கறுப்பு இயக்குனர் ஸ்பைக் லீ.

# வாசகரிடம் இருந்து ஒரு கடிதம்

## திருமணங்களிலும் சாதி வெறி

கடந்த 11-7-93 ஞாயிற்றுக் கிழமை ஈஸ்ட்ஹாம் முருகன் கோவிலில் நடைபெற்ற ஓர் திருமண வைபவத்தின் போது இடம்பெற்ற ஓர் அநாகரீக சம்பவத்தை இங்கு குறிப்பிடவேண்டும்.

திருமணத்தில் தாலிகட்டும் முக்கிய சம்பிரதாயத்தைத் தொடர்ந்து வந்திருந்த விருந்தினர்கள் ஒவ்வொருவராக மணமக்களை வாழ்த்தி பரிசளித்துக் கொண்டிருந்தார்கள். தம்பதிகளாக வந்தவர்கள் மணமக்களின் அருகில் நின்று படமெடுத்துக் கொண்டார்கள். இச்சம்பவங்கள் அனைத்தையும் காம்கோடர் அல்லாத பெரிய பெரிய வீடியோக் காமிரா மூலம் படமாக்கிக் கொண்டிருந்தார் ஓர் ஈழத்துப் படப்பிடிப்பாளர். அவருக்கு ஒத்தாசையாக இன்னுமொருவர் (அவரது மைத்துனர்) வேண்டிய அறிவுரைகளையும் ஆட்களை ஒழுங்காக நிற்கும் நிலையையும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். பெரியதொரு தமிழ் சினிமாப் படப்பிடிப்பு நடாத்தும் மனப் பாங்கில் அவர் செயற்பட்டுக் கொண்டிருந்தார். (நம்மவர்கள் நாகரீக மோகம் அந்தணர் வராவிட்டாலும் பரவாயில்லை வீடியோக்காரர் வந்தால்தான் வைபவம் நிறைவுற நடைபெறும் என்ற மனநிலைக்கு வந்துள்ளது! பிறந்ததினமானாலும் சரி பதிவுத்திருமணமானாலும் சரி இதுதான் இன்றைய நிலை).

மாப்பிள்ளையின் நீண்டநாள் நண்பர்கள் நால்வர் தமது மனைவி குழந்தைகளுடன் புதுமணத்தம்பதிகளுடன் நின்று படமெடுக்க விரும்பி மணமேடைக்கு வந்தார்கள். இதை அவதானித்த நமது டைரக்டர் எல்லாரையும் எடுக்க முடியாது என்று அடம்பிடித்து ஆத்திரப்பட்டார். மீண்டும் மீண்டும் அவர் சத்தம் போடவே மணமகனின் நண்பர்களில் ஒருவர் சிறிது கேலியாக முடிந்தால் எடுங்கள் இல்லாவிடில் விடுங்கள் என்ற தோரணையில் ஏதோ சொல்லவே மிகுந்த கோபப்பட்ட டைரக்டர், மகிழ்சிகரமான திருமண வைபவம் என்பதையே மறந்து, தாம் பணத்துக்காக அங்கு படமெடுக்க வந்தவர் என்பதையும் மறந்து அநாகரீகமான வார்த்தைகளை உதிர்க்கத்தொடங்கினார்.

அதுவும் தமிழ் மக்களிடையே தற்போது மங்கி மறைந்து வரும் நோயான சாதிப்பரிவினையை உயிர்ப்பிப்பது போல "அம்பட்டன், பறையனிடம் போய் இந்தக் கதையைக் கூறும்" என சத்தம் போட்டுக் கூறியதுடன் வேறு அசிங்கமான வார்த்தைகளையும் பிரயோகித்தார். இவரது இந்தக் கீழ்த்தரமான நடத்தை வந்திருந்த அனைவரையும் அவமதித்ததுடன் திருமண வீட்டுக்காரரையும் மனம் வருந்த வைத்தது. நாடு விட்டு ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் அதுவும் லண்டனுக்கு அகதிகளாக வந்திருந்துகொண்டு, இங்கும் வெள்ளையர்கள் எம்மேல் நிறபேதம் காட்டுகிறார்கள் என்று உரக்க உரிமைக்குரல் எழுப்பும் எம்மக்கள் மத்தியில் இதுபோன்ற சாதி வெறிபிடித்த அறிவிலிகள் இன்னும் இருக்கிறார்கள் என்பதைக்காண வேதனையாயுள்ளதுடன் திருந்ததாத இவர்களை பொதுவைபவங்களுக்கு பணம் கொடுத்து அழைக்கும் அனைவரையும் கவலையுடன் அறிவுறுத்துகின்றேன்.

கலாநிதி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




எம்.எஸ்.ஏ ஓடியோ வீடியோ விசன்ஸ்

குறைந்த விலையில் பழைய புதிய சி.டீக்கள், ஓடியோ, வீடியோ கசற்றுக்கள்
தமிழ் சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் புதிய ஓடியோ, வீடியோ கசற்றுகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய
புதிய ஸ்தாபனம் (விம்பிள்டன் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில்)

335 கெய்டன்ஸ் றோட், விம்பிள்டன். தொலைபேசி: 081 - 544 9837

## காத்திருந்த கண்களே...... தொடர்ச்சி

அரவணைத்து வளர்த்து விட்டவள். எல்லோருக்கும் இளையவன் ஆனதில் சசிக்கும் அவளுக்கும் ஏறத்தாளப் பத்து வருட வித்தியாசம். யாரும் அவனைக் குறைகூறவோ, பேசவோ முடியாதபடி அவளது கண்மூடித்தனமான பாசம் சண்டைக்கு வந்துவிடும். ஒரு காலை இழுத்து நடந்தபடி அவள் சசிக்கு சோறூட்டி வளர்த்தது இன்றும் அவன் கண்களை விட்டகலவில்லை. அவளுக்குத் திருமணம் பேசி முற்றாகி ஊரெல்லாம் உறவினர்களை வரவேற்று, பந்தலில் இருக்கவேண்டிய அன்று தாலி கட்டவேண்டியவன் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி விலகிப்போய் விட்டான். அப்போது சசிக்கு பதினைந்துதான் வயது. பாசத்தை ஊட்டிவளர்த் சகோதரி இடிந்துபோய், வாய் விட்டு அழவும் முடியாமல் சுவரோடு சுவராக இருந்தததைக் காண அழுகையும் ஆத்திரமும் தான் பொங்கிவந்தது. என்ன கதைக்கிறோம் என்ற சுய நினைவில்லாமலே வயதுக்கு மூத்த அந்த அயோக்கியனைப் பார்த்து ஏதோவெல்லாம் கூறித்திட்டி உனக்கு விருப்பமில்லாவிட்டால் முதலே சொல்லுறதுக்கென்ன. என்ரை அக்காவை அவமானப்படுத்தினதுக்கு நீ ஒருநாள் அழத்தான் போறாய்... '' என்று சொல்லுப்பாதி அழுகை பாதியாய் கத்தித் தீர்த்தான். அக்கா அன்றில் இருந்து முடமாகிப் போனாள். கால் ஊனத்தைக் காட்டிலும் மனதில் பட்ட அடி பெரிதாக விழுந்ததில் வெளிவாசலுக்கு வருவதையே தவிர்த்து, கதைப்பதைக் குறைத்து இயந்திரமாகி விட்டிருந்தாள். அவர்களிடம் இருந்த கொஞ்சநஞ்சக்காசையும் அவளின் திருமண உடைகள், சாப்பாட்டுப்பந்தல், திருமணப்பத்திரிகை, நகைகள் என்பன தின்றுவிட்டிருந்தன. அதன் பின் தனக்கு எந்தத்திருமணப் பேச்சும் வேண்டாம் என விலத்தி நின்றவளை அவனால்க்கூட மாற்ற முடியவில்லை. அதன்பின் அவன் லண்டன் வந்தபின்பும் எத்தனையோ கடிதங்கள் அனுப்பியும் அவள் பிடி கொடுத்து எழுதவில்லை. அவள் தனக்கொரு வாழ்க்கையை அமைக்காமல் சசியால் எப்படி நிம்மதியாக இன்னொருத்தியுடன் வாழமுடியும்? இந்த எண்ணமே அவளைத் தன் காதலை அடக்கி வாழத் தூண்டியது. மனம் தன் சுதந்திரத்துக்கு போக ஒட்டாமல் தடுத்து வாழப்பழகிய அவனால் காதல் விதை விழுந்து விட்டதை மட்டும் ஏனோ தடுக்க முடியவில்லை. அவனும் சாதாரண மனிதனாய்ப் பிறந்துவிட்ட சராசரி ஆண்தான். முனிவனாகவோ, ஞானியாகவோ பிறந்துவிடவில்லையே. இது அவன் மனம் சொன்ன சமாதான வார்த்தைகள். நாட்கள் போய்ச் சேர்ந்தபோது அவன் மனது தன் காதல், ஊமை கண்ட கனாப்போல ஆகிவிடுமோ என எண்ண முயற்சித்தது. இவ் வேளையில் தான் தன் உயிர்நண்பனான பிரபாவின் மூலம் திருமண சம்பந்தம் தொடர்பாக சிலா கேட்டு வந்திருந்தார்கள். இது முதற்தடவையல்ல. இதற்கு முன்பும் பலர் இவனது திருமணம் சம்பந்தமாக வந்ததும், தட்டிக் கழித்ததும் பலதடவை நடந்தது என்பது பிரபாவிற்கும் தெரிந்ததுதான். இருந்தும் இம்முறை அவன் மனைவிதான் நம்பிக்கையூட்டி அவனை சசியுடன் கதைத்துப்பார்க்க அனுப்பியிருந்தாள். பிரபாவின் மனைவியும் சசியின் தொழிற்சாலையில் வேலை பார்த்ததில், அவர்கள் இருவரையும் வாழ்க்கையில் சேர்த்துவிட எண்ணியதில் வியப்பேதும் இருக்கவில்லை.



அவுஸ்திரேலியாவில் கட்டப்படும் ஸ்ரீசிவா-விஸ்ணு கோவில் கட்டட நிதி சேகரிக்கும் பணியில் விக்டோரியா இந்து சமூகம் இறங்கியுள்ளது.

கோவில் கட்டிட நிதிக்கு பணம் அனுப்ப விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்:

Dr. R. Sri kanthan Treasurer Hindu Society of Victoria 13 Globe Place Epping, Vic 3070

வழக்கமாக சலிப்புடன் தட்டிக்கழித்து விட்டு கத்தித் தீர்க்கும் நண்பன் சசி பெண்ணின் பெயரையும், வேலைசெய்யும் இடத்தையும் சொன்னபோது ஆச்சரியத்தோடு கேட்டுவிட்டு ஆர்ப்பாட்டம் ஏதுமில்லாமலே அடங்கி மௌனமாகிப் போனதை பிரபா பெரிய விடயமாகத்தான் எடுத்துக் கொண்டான். மேற்கொண்டு இரண்டு நாட்கள் கழிந்து போக விடாமல் முயற்சி செய்ததில் சசி தன் பூரண சம்மதத்தை, தன் மாற்ற முடியாத நிபந்தனையோடு வாய் வார்த்தையாக சொல்லிவிட்டான். பிரபாவும் மனைவியும் மகிழ்ந்துதான் போனார்கள். வசந்தா வீட்டிலும் அவள் சகோதரர்கள் நீண்ட காலமாக அவள் வயதிற்கும் அடக்கத்திற்கும் ஏற்ற குணமான ஆண்மகனைத் தேடித்திரிந்த காரணத்தால் அவன் நிபந்தனைக்குட்பட்டே அவனைச் சந்தித்துப் பேசினார்கள்.

அதாவது சசி தான் வசந்தாவை சம்பிரதாயப்படியும், சட்டப்படியும் மனைவியாக ஏற்றுக் கொள்ள இரண்டுவருட காலத்தை தரும்படி கேட்டிருந்தான். அதற்கிடையில் எப்பாடுபட்டாவது தன்சகோதரிக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுத்து விடுவேன் என்ற நம்பிக்கையையும் சவாலாக எடுத்துக் கொண்டான். இது தான் திருமணம் செய்வதற்காக மட்டும் எடுத்துக் கொண்ட சபதம் அல்ல. இவ்வளவு காலமும் சகோதரியின் திருமணம் தொடர்பாக எடுத்த முயற்சிகளை இன்னும் சிறிது ஊக்கத்தோடு முன்னெடுத்து அவளுக்கு இன்னும் வயது ஏறிப்போகமுன் நல்ல முடிவு ஒன்று கிடைக்க வேண்டும் என்ற அவா அவனுக்கு. மிகவும் நம்பிக்கையோடும் ஒரு புத்துணர்வோடும் சசி இயங்க ஆரம்பித்தான். வேலையில் மாத்திரமல்ல, சகோதரியின் திருமணப்பேச்சு, அது சம்பந்தமான அலுவல்களில் ஆர்வத்தோடு செயற்படுவதற்கு வசந்தாவின் நட்பு ஆதரவாயக் கைகொடுத்தது. வாழ்க்கையில் என்றுமில்லாதவாறு பிடிப்பு ஒன்று அவனுள்ளே உருவாகத் தொடங்கியது. முன்புபோல் இல்லாது சிரித்த முகமும், நேர்த்தியான உடையுமாக அவன் உலாவத் தொடங்கியபோது வசந்தாவுமட உள்ளுக்குள் பெருமையால் பூரித்துப்போனாள். அவர்கள் இருவரும் வெளியெங்கும் பவனி வரவில்லை. தனியிடங்களில் சந்தித்துப் பேசியிருக்கவில்லை. ஆனாலும் அவர்கள் ஒருவாமேல் ஒருவர் வைத்திருந்த அன்பு நாளுக்குநாள் வலிமை கொண்டது. இது ஆண்டவனுக்குக் கூட பொறாமையைத் தூண்டிவிட்டதோ என்னவோ?

சசியின் விடாமுயற்சியும், பிரார்த்தனையும் பலனைக் கொண்டு வந்திருந்த நேரம் அது. சகோதரிக்கு நல்ல வரன் ஒன்றைக் கண்டு, பேசியபின் அம்மாவுக்கும் கடிதத்துக்குமேல் கடிதம் அனுப்பினான். நாட்டின் கடிதப் போக்குவரத்துச் சீர்கேடும், அவசர விடயங்களைக்கூட ஆறுதலாகத் தாங்கிச் சென்ற தாமதமும் சதிசெய்து கொண்டிருந்தது. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்ற கதையாய் ஒருநாளும் இல்லாத ஆச்சரியமாய் அக்காவின் கடிதம் அரைகுறை சம்மதத்தை மறைமுகமாய் தாங்கி வந்திருந்தது. சசி இன்னும் மாப்பிள்ளையைப் பற்றியோ தான் பேசி இருக்கும் இடம் பற்றியோ எதுவும் எழுதி அனுப்பவில்லை. ஒவ்வொரு கடிதமும் போய்ச் சேர்ந்து அங்கிருந்து ஆமைவேகத்தில் பதில் வந்துசேர ஒரு மாதம் எடுத்தது. அவர்களுக்கு நெருங்கிய உறவோ, நட்போ எதுவும் சொல்வதற்கென்று இருக்கவில்லை. திருமணமாகிப் போன சகோதரிகளும் தாய் வீட்டை அதிகம் அககறைபபடுததாததில எதையும் சசி ஒருவனே தனித்து நின்று தீர்மானித்து, காரியங்களை செய்யத் தூண்ட வேண்டிய நிலை.

அதே சமயத்தில் திடீரென பேரிடி அவர்கள் மத்தியில் அனாயசமாய் இறங்கியது. வசந்தா, சகோதரர்களுடன் தங்கியிருந்த அவர்களது அன்புத்தாய் வயோதிபச் சுமையை தாங்கி வாழ மாட்டாதவளாய் படுக்கையில் விழ, வைத்தியர்கள் இன்றோ, நாளையோ எனக்கையை விரித்துவிட்டார்கள். மரணத்திற்கும், நிகழ்வுக்குமிடையே ஊஞ்சலாடிக் கொண்டிருந்த உயிர் தன் நினைவு திரும்பிய போதெல்லாம் தன் ஒரே மகளின் திருமணத்தைக் கண்ணாரக்காண ஏங்கியது. மரணத்தின் பிடியில் எந்நேரமும் சிக்கலாம் என்ற ஆத்மா தன் உடலோடு இருக்கும் நேரத்தில் பந்தபாசங்களுக்கு ஈடுகொடுத்தாட, தாயின் வழிந்தோடும் கண்ணீரும் நோயும் வசந்தாவின் சகோதரர்களை மிரட்டியது. அவர்கள் சசியை வற்புறுத்தத் தொடங்கினார்கள். தாயன்பு வசந்தாவையும் தன்னிலை மறக்கச் செய்தது. தாயின் இறுதி வேண்டுகோள் இது. நிச்சயித்த மாப்பிள்ளை பக்கமே இருக்க கவலை ஏன் என எண்ணியதில் சசியின் நிபந்தனையை அடியோடு மறந்தார்கள் அனைவரும். சசிக்கு இக்கட்டான நிலைமை. ஆயினும் அவனால் தன் தீர்மானத்திலிருந்து மாறவே முடியவில்லை. அவர்களுக்கு அவர்கள் தாயின் ஆசாபாசங்கள் எவ்வளவு முக்கியமோ அதேயளவு நியாயம் அவன் பக்கமும் இருந்தது. திரைப்படங்களில் வருவதைப்போல திருமணத்தை முடித்துக்கொண்டு அம்மா எனக்கொரு இக்கட்டான சூழ்நிலையில் இச்சம்பவம் நடந்ததென எழுதிவிட அவன் மனம் ஒப்பவில்லை. சகோதரியின் சம்மதமின்றி, தாய்க்கு அறிவிப்பின்றி வாழ்க்கை முழுவதும் பாதிக்கப் போகும் ஒரு விடயத்தைப்பற்றி இலகுவில் முடிவெடுக்க அவனால் முடியவில்லை. காதலை விடவும் கடமையே பெரிதாய்

தொடர்ச்சி 9ம் பக்கம்

www.tamilarangam.net


# லண்டனில் நடைபெற்ற இந்துவின் இல்ல விளையாட்டுப்போட்டி

3.7.93 சனிக்கிழமை காலை 10 மணிக்கு இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் மட்டுப்படுத்தப்பட்ட 6 ஓவர் கிரிக்கெட் போட்டி பார்வையாளர்களின் நாடித்துடிப்பை அதிகரித்து அவர்களுக்கு பரபரப்பூட்டுவதையும் காண முடிந்தது. இதனை தொடர்ந்து அஞ்சல் ஓட்டம், பட்மின்றன், ரேபிள் ரெனிஸ் என்பன மிக சிறப்பாக நடைபெற்றன.

மிகவும் விறுவிறுப்பாக கிரிகெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் நாலிங்கம் அணியினை எதிர்த்து ஆடிய காசிப்பிள்ளை இல்லம் இறுதியில் தோல்வியுற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய காசிப்பிள்ளை இல்லம் 6 ஓவர்களில் சகலவிக்கட்டு 42 ஓட்டங்களை பெற்று கொண்டனர். இவற்றில் ஜெயம் ஆட்டம் இழக்காமல் 20 ஓட்டத்தைப் பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நாகலிங்கம் இல்லம் 4 ஓவர்களில் 44 ஓட்டங்களை எடுத்து இவ்வாண்டின் சாம்பியன் வெற்றி கேடயத்தை தட்டிக் கொண்டனர். இவற்றில் இந்துவின் இளம் சிங்கம் எனக் கருதப்படும் சுல்தான் 22 ஓட்டங்களை ஆட்டம் இழக்காமல் எடுத்தார். இதில் ஒரு சிக்ஸரும் 3 பவுண்டரிகளும் அடங்கும்.

இவற்றிற்கான பரிசில்களை பழைய மாணவ சங்க தலைவரின் பாரியார் டாக்டர் (திருமதி) வேற்பிள்ளை வழங்கினார். சங்கத்தின் செயலாளர் வைகுந்தவாசன் நன்றியுரையின்போது இந்த ஆண்டு மே 31–இல் நடைபெற்ற இலங்கை பாடசாலைக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி யாழ் இந்து கல்லூரியின் அரை இறுதி ஆட்டம் வரை விளையாடுவதற்கு உறுதுணையாக இருந்த லோக பிரதாபனுக்கும் மற்றும் விளையாடிய சகல வீரர்களுக்கும் நன்றி தெரிவித்தார். இவற்றிற்கான சகல ஏற்பாடுகளையும் விளையாட்டு செயலாளர் திரு. லோக பிரதாபன் நெறிப்படுத்தினார். ■

# மீண்டும் ஒரு சாதனை

(லண்டன்)

விம்பிள்டன் எதிர் கிழக்கு லண்டன் தமிழ் வி.க. 30 ஓவர் கிரிக்கெட் போட்டியில் விம்பிள்டன் அணி வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய விம்பிள்டன அணி 180 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளை இழந்தது. கரி – 18, சுகந்தன – 33, பிரசன்னா – 23, ஆட்டம் இழக்காமல் எட்வின் – 78 ஓட்டங்களையும் எடுத்தனர். கிழக்கு லண்டன் தமிழ் வி.க. பந்து வீச்சாளர் பிரதீபன் சிறப்பாக பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளை எடுத்தார். கி. லண்டன் அணி81 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் பறிகொடுத்தது. விம்பிள்டன் அணியின் சார்பில் குரு 29–4, பகீரதன் 20–3 விக்கட்டுகளையும் எடுத்தது குறிப்பிடத்தக்கது.




# புளூஸ் அணியுடன் விம்பிள்டன் அணி மோதியது

20–6–93இல் நடைபெற்ற விம்பிள்டன் அணிக்கு எதிரான போட்டியில் ரூட்டிங் அணி வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய விம்பிள்டன் சகல விக்கட்டுகளையும் இழந்து 107 ஓட்டங்களை எடுத்தது. இவற்றில் எட்வின் 17, கரி 36, ரவி 2, சுகந்தன் 2, பசல் 1, உதயன் 5, தீபன் 6, ஜெயதீபன் 7, வில்சன் 10 ஓட்டங்களையும் எடுத்தனர் அணியின் காப்டன் பகீரதன் ஓட்டம் எதையும் எடுக்கவில்லை. பந்து வீச்சில் வி.ராஜன் 17–1, வசி 20–3, ஜீவன் 30–1, ராஜ் 16–2, எம.ராஜன் 13–2 கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய புளூஸ் அணி 8 விக்கட் இழப்பில் 108 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டினர். இவற்றில் வி.ராஜன் மிகவும் சிறப்பாக ஆடி ஆட்டம் இழக்காமல் 34 ஓட்டத்தை பெற்றார். அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தார். மற்றும் எம்.ராஜன் 15, கிரோசக் 10, ஜீவன் 7 ஓட்டத்தையும் பெற்றனர் பந்து வீச்சில் பசல் 23–1, கரி 8–1. வேக பந்து வீச்சாளர் உதயன் 20–3 விக்கட்டுகளையும் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. ■

# யாழ் இந்துவிடம் சென் தோமஸ் கல்லூரி மண் கவ்வியது. இந்து 208–9

யாழ் இந்து கல்லூரி எதிர் சென் தோமஸ் கல்லூரிக்கு இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் ஓவர் போட்டியில் யாழ் இந்து 130 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இந்து கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி 9 விக்கட் இழப்பிற்கு 208 ஓட்டங்களை குவித்தனர். மிகவும் சிறப்பாக ஆடி சுல்தான் (சுகன்) – 46, அபி (கப்ரன்) 42, றுக்கேஸ் 30 ஆட்டம் இழக்காமல் பாலா 33 ஓட்டங்களையும் அணிக்காக எடுத்தனர். தோமஸ் அணியின் சாரபிஸ் மெலின்ட் 3, பாலேந்திரா றஞ்சித் 23, சுரேஸ் 2 ஆகியோர் விக்கட்டுகளை கைப்பற்றினர். செ. தோமஸ் அணியினர் 209 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடி 78 ஓட்டங்களை பெற்று சகல விக்கட்டுகளையும் இழந்தது. இவற்றில் பாலேந்திரா றஞ்சித் 27 ஓட்டத்தினை எடுத்தார். இந்துவின் அதிவேக பந்துவீச்சாளர்கள் பாஸ்கரன் 3, சுல்தான் 2, றுக்கேஸ் 2, அபி 1, ரி.ரவி 2 ஆகியோர் விக்கட்டுகளைக் கைப்பற்றினர். இந்துவின் விக்கட் காப்பாளர் கோபி தொடர்ச்சியாக பந்துகளைப்பிடித்து செ.தோமஸ் அணியில் மூவரை வெளியேற்றினார். இந்துக் கல்லூரி அணி 2வது தடவையாகவும் செ.தோமஸ் கல்லூரியை மண் கவ்வச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# செரண்டிப் அணியினரின் விறுவிறுக்கும் சாதனை

செரண்டிப் அணிக்கு எதிரான கொக்குவில் கிரிக்கெட் கிளப் அணி போட்டியில் செரண்டிப் அணி வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய செரண்டிப் அணி 177 ஓட்டங்களைப் பெற்றது. ஆட்டமிழக்காமல் சாந்தா 30, வினோ 29, கிருபா 19, விக்னா 7, பந்துகளைச் சந்தித்து 26 ஓட்டங்களையும் இதில் 2 சிக்ஸ், 3 பவுண்டரிகளையும் அடித்தனர். பந்து வீச்சில் மங்கலேஸ் 38–4, கபிலா 1–22, பிரபா 2–16. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கொ.கி.கி அணி 156 ஓட்டங்களில் சகல விக்கட்டுகளையும் இழந்தனர். இவற்றில் டரைன் 33, ஜெயம் 21, பிரபா 20, கபிலன் 17 ஓட்டங்களையும் பந்து வீச்சில் றஞ்சித் 36–2, ராஜ் 22–2, விக்னா 27–1, தயா 20–1. சுழல் பந்து வீச்சாளர் ஒஸ்மான் (காப்டன்) 4–28 ஆகியோரும் கைப்பற்றினர்.

# தியாகிகள் தினம் யூன் 19

## ஈ.பி.ஆர். எல்.எவ் இன் உத்தியோகபூர்வ அறிக்கை

சென்னையில் வைத்து படுகொலை செய்யப்பட்ட ஈ.பி.ஆர். எல்.எவ் இன் செயலாளர் நாயகம் தோழர் கபத்மநாபா மற்றும் அவருடன் மரணித்த பன்னிரு தோழர்கள் உட்பட இது வரை காலமும் விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த ஈ.பி.ஆர். எல்.எவ் தோழர்களுக்கும், ஏனைய இயக்கப் போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக தோழர் கபத்மநாபா அவர்கள் மரணித்த நாளான யூன் 19ம் திகதியை தியாகிகள் தினமாக அனுஸ்டித்து சர்வதேச ரீதியாக ஈ.பி.ஆர்.எல்.எவ். தோழர்களாலும், பொதுமக்களாலும் ஆதரவாளர்களாலும் சக இயக்க உறுப்பினர்களாலும் அஞ்சலிகள் செலுத்தப்பட்டு, கூட்டங்கள், ஊர் வலங்கள், கண்காட்சிகள் என் பன நடாத்தப்பட்டன.

வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. ஈ.பி.ஆர். எல்.எவ். இன் பாராளுமன்ற உறுப்பினரான தோழர் குகனேஸ்வரன் தலைமைதாங்கினார். ரெலோ அமைப்பைச் சேர்ந்த செந்தோழன், புளட் அமைப்பைச் சேர்ந்த கிருபைராஜா மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோர் உரையாற்றினர். மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களில் விசேட பூசைகளை பொது மக்கள் நடாத்தினர்.

சென்னையில் உள்ள கிருஷ்ணம் பேட்டையில் உள்ள சேமக்காலையில், தோழர் நாபா மற்றும் தோழர்கள் அடக்கம் செய்யப்பட்ட நினைவிடத்தில் ஆதரவாளர்கள், ஈ.பி.ஆர்.எல். எவ் தோழர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். அன்று மாலை சென்னை அண்ணா சாலையில் உள்ள எல்.எல்.ஏ கட்டிடத்தில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. தமிழ் நாட்டின் பிரபல தினசரிப் பத்திரிகையான தினமணியின் பிரதம ஆசிரியர் திருமாறன், இந்திய மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் பரமேஸ்வரன், புதுடில்லியில் இருந்து வெளிவரும் பிரபல ஆங்கில வார இதழான "மெயின் ஸ்ரீம்" சஞ்சிகையின் உதவி ஆசிரியர் இளங்கோவன் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கோயம்புத்தூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் தலைமையில் தோழர் பத்மநாபாவின் படங்கள் அடங்கிய பதாகைகளுடன் ஊர்வலம் ஒன்று நடைபெற்றதுடன் அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் சர்வதேச கிளைகளின் ஒன்றியத்தினால் வெளிநாடுகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன தியாகிகள் தின பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. லண்டனில் ஈ.பி.ஆர்.எல்.எவ் தோழர்கள் ஆதரவாளர்களினால் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. ஜேர்மனியில் உள்ள நூறன்பேர்க் நகரில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. புளொட் உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களும் உரையாற்றினர். விடுதலைப் போராட்டமும் ஈ.பி.ஆர். எல்.எவ் உம் பற்றிய கண்காட்சி ஒன்று இடம் பெற்றது. கவிதா நிகழ்வு, நாடகங்கள் ஆகியன இடம் பெற்றது. இங்கு பெருமளவு மக்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# நாரதர் பகுதி

இருக்கவே இருக்கிறது சந்தைமடம்

1983 ஆடிக்கலவரத்தின் முதல் குறைமாசப்பிரசவம்... ஈழத்தில் முப்பத்தெட்டு இயக்கங்கள், அதை பிரதிநிதிவப்படுத்த லண்டனில் ஆயிரத்தெட்டு பிரதிநிதிகள் (நானும் உட்பட 1009). காலப்போக்கில் பலர் பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்று ஓடியே போய்விட்டனர். எஞ்சிய சிலர் இந்தியாக்காரனை அல்லது வேறொருவனின் கையைப்பிடித்து, காலைப்பிடித்து.... காக்காய்பிடித்து பதவிக்கு வரவென டெல்லிக்கும், சென்னைக்கும், லண்டனுக்குமிடையே நாயாய் அலைந்து திரிந்தனர். விம்பிள்டன் பிள்ளையார் அருளால் சிலர் பதவியையும் கைப்பற்றினர் பதவியில் இருந்த சிலநாட்களுக்குள் கூடச்சென்ற சக தோழர்களுக்கு வெடி விழவே, குதிக்கால் குண்டியை அடிக்க லண்டன் வரை ஓடியே வந்தனர்.

இங்கு வந்து சிறிதுகாலம் இறந்த தோழர்களுக்கு 7ம் நாள் துக்கம் கொண்டாடி, மாத ஞாபகம் கொண்டாடி, வருடத்திற்கு விழாவெடுத்துக் கொண்டிருந்தனர். எத்தனை நாளென்றுதான் இவர்களும் விழாவெடுத்துக் கொண்டிருப்பது. இவர்கள் பதவிக்குவர நரசிம்ராவ் கருணைகாட்டுவதாகவும் தெரியவில்லை. புலிகளை அழிப்பாளென நம்பியிருந்த பரதேசி ஜெயலலிதாவும் புலிகளுடன் சமரச பேச்சுவார்த்தை நடாத்தியதாக வெளிவந்த அறிக்கைகள் இவர்களின் வயிற்றெரிச்சலைக் கூட்டியது. இவையொன்றும் இப்போதைக்கு சரிப்பட்டு வருவதாகத் தெரியவில்லை. கோயில் சூளமெனத் திரியும் கார்ல்மாக்ஸ் அனுமதிக்கவில்லை. என்ன தான் ஆச்சரியம்.... இவர்கள் தற்போது லண்டனிற்கு புலம்பெயர்ந்த தமிழ் அகதிகளின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் இரவோடிரவாக ஸ்பெசலிஸ்ட்'' ஆகிவிட்டார்கள். ஆகியது மட்டுமல்லாமல் லண்டன் வாழ் தமிழ் மக்களுக்கு தமிழ் வானொலியில் அறிவுரை வேறு வழங்குகிறார்கள்.

நாரதரின் கருத்து: உங்களின் படிப்பு அப்படியும் இப்படியும்!! முட்டாளுக்கு சொந்தமான அரசியலுக்குக் கூட நீங்கள் லாயக்கில்லாதவர்கள் என பரவலாக மக்கள்'' பேசிக்கொள்கிறார்கள். தயவு செய்து இங்கு ஒழுங்காகப் படிக்கும் லண்டன் தமிழ்ப் பிள்ளைகளின் வளர்ச்சியில் தலையிடவேண்டாம். நாய்க்கு ஏன் போர்த்தேங்காய்?? தயவு செய்து அரசியலுக்கே போய்விடுங்கள். அங்கு தேர்தல் நடந்தால் (?) ஊரில் மிஞ்சியிருக்கும் எனது பாட்டனும், என் மனிசியின் பூட்டனும் உங்களுக்கே வாக்களிக்கும்படி இன்றே கடிதமெழுதி விடுகிறேன். தயவு செய்து போய்விடுங்கள்.

---

இவர் ஈஸ்ராம் என்னும் பகுதியில் வசிக்கிறார் என்று கேள்வி. நான் சொல்லக் கேட்ட விசயம்தான். ஆனால் சரியான மனவருத்தம் தரும் செயல்.

இவருக்கு லண்டனிலை பொம்பிளை கிடைக்காமல் கனடாவிலை இருந்து ஒரு பெண்ணை வரவழைத்து திருமணம் செய்ய இருந்தாராம். பொம்பிளை கனடாவிலை ஒரு வங்கியிலை வேலை. அதோடை கனடா சிற்றிஷெர்சிப் வேறை. இங்கை வந்து அவரை கலியானம் கட்டி கனடாவுக்கு கூட்டிப் போவதாக ஒப்பந்தம் வேறை. பெட்டை இங்கை வந்த உடனை, மாப்பிள்ளைக் குஞ்சுக்கு நகையை உரசிப்பார்க்க வேணும் எண்டு ஆசையாம். சரியெண்டு நகையைக் குடுத்தினமாம். உரசிப் பார்த்த பிறகு காசை எண்ணிப்பார்க்க வேணும் என்று சொன்னாராம். அதுவும் கொண்டு போய்க் குடுத்தபின் வேறு சாட்டுச் சொல்லி பெட்டையை வேண்டாம் என்று சொல்லிவிட்டாராம் மாப்பிள்ளை மன்மதன். பாவம் பொம்பிளை, ஒரு ஆம்பிளையை நம்பிவந்திருக்காம். ஆட்டுக்கிடாயை நம்பி வந்தால்........ இதுதான் கதி.....

## காத்திருந்த கண்களே......

தொடர்ச்சி

சாதாரணமாக இருப்பதாய்க் காட்டிக்கொண்டான்.

நீண்ட பெருமூச்சையும் நடந்ததையே நினைத்து அழுத மனத்தையும், இதோ தொழிற்சாலையின் மணி கலைக்கிறது. எல்லோரும் வெளியேறுகிறார்கள். வீட்டிற்குத் திரும்பவே மனமில்லை. எங்கே போவது எனவும் தெரியவில்லை. கனத்த மனமும், சோர்ந்த உடலுமாக திரும்பியவனுக்கு ஊரிலிருந்து வந்த கடிதம் வரவேற்பைக் கொடுத்தது. உடைத்துப் படிக்க முடியாதபடி கண்ணீர் மறைத்தது. அறைக்கதவை சாத்திவிட்டு பட்டும் படாமலும் வாசிக்க ஆரம்பித்தவனுக்கு உலகமே தட்டாமாலையாக சுற்றத் தொடங்கியது. ஆம், அம்மாதான் எழுதியிருந்தாள். சந்தோசத்தில் தானே கிறுக்கிக் கிறுக்கி எழுதிய கடிதம். அவன் யாருக்காகத் தன் ஆத்மார்த்த காதலை ஒரே நாளில் தியாகம் செய்யத்துணிந்தானோ அவள் – அவன் சகோதரி திருமணம் செய்து விட்டாள். மாப்பிள்ளை அதே பழையவன்தான். அவனுக்கு சந்தோசம் ஒருபக்கம் இருக்க நெஞ்சைப் பிளந்தபடி சோகம் பொங்கி எழுகிறது மறுபுறம். தன்னால் தாய்க்கும் பாரம். சகோதரனிற்கும் பாரம் என எண்ணித் தன் சோகத்துக்குக் காரணமானவனிடமே தன்னைக் கொடுத்து விட்டாளா? அம்மா தான் நடந்ததை விபரமாக எழுதியிருந்தாள். இவ்வளவு காலமும் தானும் திருமணம் செய்யாது வாழ்ந்திருந்த மருமகனைப்பற்றி பாராட்டியிருந்தாள். சசிக்கு தலைசுற்ற ஆரம்பித்தது. ஒருமிக முக்கியமான சந்தோசமும், கலைக்கப்பட்ட அவனது கற்பனை சந்தோசமும் ஒரே நாளிலா அவனைத் தாக்கவேண்டும்? வெளியே காற்று அடங்கிப் போய் மழைமேகம் திரண்டு பூமியை மழைகொண்டு பெரிதாய்த் தாக்கத்தொடங்கியிருந்தது. சசி மெல்லச் சரிந்து முகம் பதித்து அழத் தொடங்கினான்.

யாவும் கற்பனை.

## மலையக மக்கள் முன்னணித் தலைவர்களின் வழக்கு விசாரணை – ஓர் அலசல்

பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகால சட்டம் ஆகிய இரு மனித உரிமை மீறல் சட்டங்களும் ஜனநாயகத்தை மாத்திரமல்ல நீதித்துறையின் சுதந்திரமான செயற்பாடுகளையும்கூட வெகுவாகக்கட்டுப்படுத்தி, அதிகாரத்திலிருக்கும் அரசாங்கத்தின் அரசியல் விருப்பு வெறுப்புகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ளும் கருவியாக நீதித்துறையை, தரமிழக்கச் செய்கின்றன.

அதிகாரத்துஷ்பிரயோகங்களுக்கு அஞ்சாமல் துணிச்சலுடன் சில முதுகெலும்புள்ள நீதிபதிகள் செயற்படும் போது நீதித்துறைக்கும் அரசியல் அதிகார துஷ்பிரயோகத்திற்கும் இடையிலான இழுபறி வெளிச்சத்திற்கு வருகிறது.

சில நீதிபதிகளை அரசு தனது கைக் கூலிகளாக மாற்றிக் கொண்டுள்ள நிலைமையை சில பிரசித்திபெற்ற அரசியல் வழக்குகள் படம் போட்டு காட்டியுள்ளன.

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப மனுமீது விசாரணை நடத்திய பல சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளின் செயற்பாடுகள் இதற்கொரு உதாரணம்.

லலித் –காமினி கோஷ்டியினர் ஐ.தே கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து மஜிஸ்திரேட் நீதி மன்றமொன்றில் சமர்ப்பிக்கப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டதும், அதனை நிராகரித்த நீதிபதிக்கு உடனடியாக பதவியுயர்வும், ஜப்பான் விஜயமொன்றுக்கான இலவச டிக்கற்றும் அரசால் வழங்கப்பட்டமையும் இதற்கு மற்றுமொரு உதாரணம்.

மறுபுறத்தில் அரசியல் அதிகாரத்திற்கு தலைவணங்காமல் நீதித்துறையின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்காக பாடுபடும் துணிவுள்ள நீதிபதிகளின் செயல்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அத்த'' பத்திரிகைக்கு எதிராக பிரேமதாச அரசு தொடுத்த வழக்கில் பல்வேறு நிர்ப்பந்தங்களைப் பொருட்படுத்தாமல் தீரத்தோடு தீர்ப்பு வழங்கிய மேல்நீதிமன்ற நீதிபதி டி.பி.வீரசூரியாவின் பாரபட்சமின்மையை இலங்கையின் சுதந்திரபத்திரிகைகள் யாவும் பாராட்டின.

இந்த நியாயஸ்தரின் முன்னிலையில் தான் தற்போது மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனின் வழக்கு விசாரணை நடைபெற்றுவருகிறது. அரசியல் நிர்ப்பந்தங்களுக்கு அஞ்சாத நேர்மையுள்ள தைரியசாலி என்று நீதித்துறை வட்டாரங்களால் பாராட்டப்படும் மேல்நீதிமன்ற நீதிபதி திரு.சி.வி.விக்னேஸ்வரன் முன்னிலையில் ம.ம.முன்னணியின் செயலாளர் நாயகம் பாவா அப்துல் காதரின் வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

தொடர்ச்சி அடுத்த இதழில்....

## உலகத் தொழிலாளர்களே.....

2ம் பக்கத் தொடர்ச்சி

மைகள் ஏற்பட்டிருந்தன. ரைன் மாநிலத்தில் பெரிய அளவிலான முதலாளித்துவத் தொழில் துறையுடன் சேர்ந்து பாட்டாளி வர்க்கம் என்ற புதிய வர்க்கமும் தோன்றியது.

மார்க்ஸ் 1830 முதல் 1835 வரை திரிர் உயர் நிலைப் பள்ளியில் பயின்றார். என்ன வேலையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதைப் பற்றி ஒரு இளைஞனுடைய சிந்தனைகள்'' என்ற தலைப்பில் பள்ளி இறுதிவகுப்பில் அவர் எழுதிய தேர்வுக் கட்டுரை இந்தப் பதினேழு வயது இளைஞர் மனிதகுலத்துக்குத் தன்னலமற்ற சேவை செய்வதைத் தன்னுடைய வாழ்க்கையின் குறிக்கோளாக முன்பே முடிவு செய்திருந்தார் என்று எடுத்துக்காட்டுகிறார். உயர்நிலைப் பள்ளிக்குப் பிறகு மார்க்ஸ் முதலில் போன் நகரித்திலும் பிறகு பெர்லின் பல்கலைக் கழகத்திலும் சட்டவியலைப் படித்தார். அவர் சட்டவியலைத் தேர்ந்தெடுத்த போதிலும் தத்துவ ஞானத்தையும் வரலாற்றையும் மிகவும் ஆர்வத்தோடு படித்தார்.

ஜேர்மனியிலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் முதன்மையான வரலாற்றுச் சம்பவங்கள். முதிர்ச்சியடைந்து கொண்டிருந்த காலத்தில் மார்க்ஸின் விஞ்ஞான, அரசியல் கருத்துக்கள் உருப்பெற்றன. முதலாளித்துவம் வளர்ச்சியடைந்த பொழுது பல ஐரோபிய நாடுகளில் நிலப்பிரபுத்துவ உறவுகளின் எச்சங்கள் மென்மேலும் சகித்துக் கொள்ள இயலாதவையாக மாறின. இயந்திரங்கள் மற்றும் பெரிய அளவிலான முதலாளித்துவ தொழில்துறையின் வளர்ச்சி விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களின் அழிவுக்கும் அனைத்து உற்பத்திச் சாதனங்களும் பறிக்கப்பட்ட ஒரு புதிய வர்க்கத்தின், பாட்டாளி வர்க்கத்தின் தோற்றத்துக்கும் இட்டுச் சென்றன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சி வர்க்கப் போராட்டத்தைக் கூர்மைப்படுத்தியது. முதலாளித்துவ ஜனநாயக மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களின் வளர்ச்சியை ஏற்படுத்தியது. முதலாளித்துவ ஒடுக்கு முறைக்கு எதிராக இன்னும் ஒரு ஆரம்ப, இயல்புணர்ச்சியான எதிர்ப்பை வெளிப்படுத்திய பாட்டாளி வர்க்கத்தை ஒரு வரலாற்றுச் சக்தி என்ற முறையில் அரங்கேற்றியது. நிலப்பிரபுத்துவத்தின் எச்சங்கள் புதிதாகத் தோன்றிய முதலாளித்துவம் என்ற இரட்டை ஒடுக்குமுறையின் கீழ் பெருந்திரளான மக்கள் துன்பமடைந்த பின்தங்கிய பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஒற்றுமை இல்லாத, அரை நிலப்பிரபுத்துவ ஜெர்மனியில் ஒரு முதலாளித்துவ – ஜனநாயகப்புரட்சி முதிர்ச்சி அடைந்து கொண்டிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் முப்பதுகளின் கடைசியிலும் நாற்பதுகளின் தொடக்கத்திலும் ஜெர்மனியில் பெருந்திரளான மக்களிடையில் அதிருப்திகள் சமூக வாழ்க்கையில் ஒரு வேகம், முதலாளி வர்க்கம் மற்றும் அறிவுப் பகுதினரிடையில் பல்வேறு எதிர்ப்புப் போக்குகள் மற்றும் அணிச் சேர்க்கைகளின் தோற்றம் ஆகியன குறிப்பாகக் காணப்பட்டன.

தொடரும்...

www.tamilarangam.net

# ஸ்ரீலங்கா இராணுவம் உண்மையைத் திரிக்கின்றது புலிகளின் தாக்குதலில் பாரிய சேதம்

## கொழும்புப்பத்திரிகையில் செய்தி:

தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல் அவர்களின் வரலாற்றில் காணாத வெற்றி. தாக்குதலின்போது ஏராளமான ஆயுதங்களையும் வெடிகுண்டுகளையும் இவர்கள் கைப்பற்றியுள்ளார்கள். தாக்குதலின் போது இராணுவம் கூறியது போலன்றி ஏராளமான இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு இண்டிப்பெண்டன்ற் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

50 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான ஆயுதங்கள், தளபாடங்கள், மோட்டார் சைக்கிள் போன்றவை புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

83 கலவரத்தின் ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் 500க்கும் மேற்பட்ட புலிகள் பங்குபற்றினர். தாக்குதலில் 42 படையினர் கொல்லப்பட்டனர். இருப்பினும் 51 ஆயுதங்களை மட்டுமே தாம் இழந்ததாக இராணுவம் தெரிவித்தது. ஒரு வருடத்துக்கு தேவையான ஆயுத தளபாடங்களை தாம் கைப்பற்றியுள்ளதாக யாழ் நகரில் புலிகள் தெரிவித்துள்ளார்கள்.

# தென்மேற்கு லண்டனில் தமிழ[illegible] மரணம் மரணத்தின் பின்னணியில் கோரச்ச[illegible]ம்பவங்கள்

(நமது நிருபர் ரூட்டிங்)

தென்மேற்கு லண்டனில் உள்ள ரூட்டிங் பகுதியில் வசித்துவந்த இலங்கைத்தமிழ் அகதி ஒருவர் காலமானார். ரூட்டிங்கில் உள்ள பெரிய மருத்துவசாலையான சென்ற் ஜோஜஸ் ஆஸ்பத்திரியில் இவர் மரணமானார். இந்த மரணம் பற்றி ஈழமுமிக்கு கிடைத்த தகவல்கள் வருமாறு.

யாழ்ப்பாணத்தில் உள்ள கஸ்தூரியார் வீதியில் வசித்த அரியநாயகம் லிங்கநாயகம் லண்டனில் ஒரு அகதியாக வந்துள்ளார். கொறின்ஜ்பாக் வீதியின் கிளை வீதியில் ஒன்றான 36 தேர்ஸ்க் வீதியில் வசித்து வந்த இவருடன், இவரின் பாரியார் அண்மையில் இவருடன் வந்து இணைந்துள்ளார். ஐந்து வயதுடைய ஒரு மகனுக்கு தந்தையான இவர் சில இளைஞர்களுடன் தர்க்கப்பட்டாதாக அறியமுடிகிறது. இந்த தர்க்கத்தில் ஆத்திரமுற்ற இளைஞர்கள் இவரை 24-7-93 அன்று மாலை வீட்டில் இருந்து அழைத்து வந்து ஒரு வாகனத்தில் ஏற்றி ரூட்டிங் பகுதியில் உள்ள தங்கள் வீட்டிற்கு கொண்டுவந் தார்களாம். சுமார் 14 பேர் வரை இந்த இளைஞர்கள் குழு இருந்ததாகப் பேசப்படுகிறது. மேற்படி அழைத்துவரப்பட்ட இவர் மனிதாபிமானமற்ற முறையில் தாக்கப்பட்டுள்ளார். மதுபானம் பாவிக்கக்கூடிய இவர் சம்பவம் நடந்த அன்றும் மதுபோதையில் காணப்பட்டதாக சிலர் தெரிவித்தனர். இவ்வாறு தாக்கப்பட்ட போது அணிந்திருந்த 'சேர்ட்' கிழிந்து போனதாகவும் இவரைத் தாக்கிய இளைஞர்களிடம் இருந்து இவர் விடுவிக்கப்பட்டபோது மேல் சட்டை இல்லாமலே தாங்க முடியாத வேதனையில் ரூட்டிங் பிரதான வீதியில் அமைந்துள்ள தமிழ் பலசரக்கு கடைஒன்றினுள் நுழைந்து அம்புலன்ஸ்க்கு தொலைபேசி அழைப்புக் கொடு க்கக் கேட்டதாகவும் கூறப்படு கிறது.

அவசரகால சிகிச்சைப் பிரிவுக்கு சென்ற இவரை பரிசோதித்த வைத்தியர்கள் வெளிக் காயங்களுக்கு மருந்து போட்டு விட்டு அவரை வீட்டுக்கு அனுப்பியுள்ளார்கள். 32 வயது நிரம்பிய இவர் வீடு திரும் பியதாகவும், வீடு திரும்ப முன் தன்னைத் தாக்கிய இளைஞர் களின் பெயர் முகவரி போன்ற விபரங்களை பொலிசாருக்கு தெரியப்படுத்திய தாகவும் கூறப்படுகிறது.

அடியின் உட்காயங்கள் ரணமாகவும் இவரினால் வலியை [illegible] கொள்ள முடியவில்லை. 29-7-93 வியாழக்கிழமை இவர் ரத்தம் ரத்தமாக வாந்தி எடுக்கத் தொடங்கியதும் இவர் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார். 31-7-93 அன்று ஆறு நாட்களின் பின் அவர் வைத்திய சாலையில் மரணமானார்.

இவரின் பூதவுடலை பரி சோதனை செய்த வைத்தியர்கள் இவரின் உடலின் சில விலா எலும்புகள் முறிந்துள்ளன என்றும் உடலின் உள்பகுதிகளில் பல காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் [illegible]த்தாக அறியப்படுகிறது. இருப்பினும் இவரின் இறப்பிற்கு [illegible] ஏற்பட்ட பாதிப்பும் அதனால் இதயம் இயங்க மறுத்த [illegible]மே மரணம் சம்பவித்ததாக [illegible] கூறுவதாக சொல்லப்படுகிறது.

கர்ப்பிணி பெண்ணான இவரது பாரியாரும் இவரது மூத்த மகனும் அவர்களது இல்லத்தில் அழுகையும் கோலமாக இருக்கின்றார்கள். அன்னாரது பூதவுடல் [illegible]க்கிழமை அன்று காலை பத்துமணியளவில் தகனம் செய்[illegible]து என்றும் அறியப்படுகிறது.

# ஜனகபுரம் மீண்டும் வழமைக்குத் திரும்பியது பீதியில் இடம் பெயர்ந்தோர் திரும்பினர்

## புலிகளின் தாக்குதல் பற்றி விபரிக்கும் படைவீரர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஜனகபுரம் என்னும் இடத்தில் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வெளியேறிய மக்கள் அனைவரும் மீண்டும் மீளக்குடியமர்த்தியுள்ளனர். புலிகளினால் தரைமட்டமாக்கப்பட்ட ஜனகபுரம் இராணுவ முகாம் மீண்டும் அமைக் கப்பட்டுள்ளது. 25-7-93 அன்று விடுதலைப்புலிகளால் தரைமட்டமாக்கப்பட்ட இந்த முகாம் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் நளின் அங்கமானா மேற்படி தகவல்களை வெளியிட்டுள்ளார். இவர் மேலும் குறிப்பிடுகையில் புலிகளின் இத் தாக்குதல்கள் தறமையாக திட்டமிட்டு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். பாதுகாப்புப் படைகளினால் இத்தாக்குதல்களை முறியடிக்க முடியவில்லை. 500க்கும் மேற்பட்ட புலிப் போராளிகள் இத்தாக்குதலில் பங்கு பற்றினர். புலிகள் கொக்குத் தொடுவாய், கோவிலன்முனை, ஜனகபுரம் ஆகிய இடங்களில் இருந்து தாக்குதல்களை மேற் கொண்டனர். தாக்குதலின்போது 24 இராணுவத்தினர் கொல்லப் பட்டுள்ளனர். 18 பேரைக்காணவில்லை. எமக்குக் கிடைத்த தகவல்களின்படி 10 புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். 17 பொது மக்கள் மரணித்துள்ளார்கள் என்று அங்கமானா மேலும் தெரிவித்தார்.

# யாழ்நகரில் 7வது நாளாக உண்ணாவிரதம் பொலிசார் இருவர் ஆபத்தான நிலையில்

(வவுனியா)

அண்மையில் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடந்த கைதிப்பரிமாற்ற பேச்சு வார்த்தை தோல்வியை அடுத்து புலிகளிடம் இருந்த கைதிகளை விடுதலை செய்ய மறுத்ததே. தங்களை அரசு விடுவிக்கும் பொருட்டு சகல முயறசிகளையும் மேற்கொள்ளும் படி வற்புறுத்தி உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினர். 30-7-93 தொடக்கம் உண்ணாவிரதம் இருக்கும் இக்கைதிகள் ஏழு நாட்கள் கடந்த நிலையில் தொடர்ந்தும் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். மேற்படி உண்ணாவிரதத்தில் இரு விரதிகள் மோசமான நிலையில் உள்ளனர் என்றும் 5-8-93 தொடக்கம் நீரருந்துலதையும் நிறுத்தியுள்ளனர்.

# திருமலையில் புலிகளின் தாக்குதல் கண்[illegible] வெடிக்கு ஏழு இராணுவம் [illegible]

(திருமலை)

2-8-93 அன்று கிடைத்த தகவல்கள் பிரகாரம் ஏழு படையினர் கொல்லப்பட்டுள்ளனர். கண்ணிவெடியில் சிக்கியே இவ்வாறு ஏழுபேரும் கொல்லப்பட்டனர் 1-8-93 அன்று தாக்குதல் இடம் பெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மேற்படி செய்திகள் [illegible]வப் பேச்சாளர் அங்கமணவினால் கொழும்பு பத்திரிகைகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க இந்திய செய்தி நிறுவனம் ஒன்றின் செய்தியின்படி வடக்கிலும் கிழக்கிலும் சேர்த்து 24 புலிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளது.

# கொழும்பு நகர்ப்பகுதிகளில் பரிசோதனை தீவிரம்

(கொழும்பு)

பம்பலப்பிட்டி கதிரேசன் கோவில் அண்மையில் குண்டு ஒன்று வெடித்தது. இந்தக்குண்டு வெடிப்பில் 6 பக்தர்கள் கொல லப்பட்டார்கள். இந்தச் சம்ப வத்தை அடுத்து கலவரம் ஒன்று மூளலாம் என்று தமிழர்கள் அச்சம் கொள்ளத் தொடங்கினர்.

அரசு நிலைமையைக் கட்டு ப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. தற்போது குண்டு வெடிப்பு நடந்த பகுதிகளில் படையினர் பெரியளவில் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதுவரை காலமும் வெறுமனே வாகனங்களை சோதிப்பதே வழக்கம். இப்போது அப்படி இல்லாமல் ஒவ்வொரு பயணியையும் பொதுமக்களையும் பரிசோதிக்கிறார்கள் படையினர். குறிப்பாக பெண்களின் கைப்பை பலத்த சோதனைக்குள்ளாக்கப்படுகிறது.


**Synthu Catering Service**

திருமணமா? பிறந்தநாளா? விசேட [illegible] வேறெந்த வைபவமா?
அந்த நாளைப்போலவே அன்றைய [illegible] இருக்கவேண்டாமா?
உணவுத் தயாரிப்புத் துறையில் 6 [illegible] அனுபவம் கொண்ட
சித்தப்பாவின் தரமான தயாரிப்பில் [illegible] வைபவங்களையும்
சுவையானதாக்[illegible].
தனிப்பட்டவர்கள் நாளாந்தச் சாப்பாடும் செய்து கொடுக்கப்படும்
லண்டனில் குறைந்தவிலையில் கூடிய [illegible]ந்திற்கு அழையுங்கள்
081-672 [illegible]